# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 20 ★ 07.04.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com




## யதார்த்த அரசியலை மேற்கொள்வதாக கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மக்களுக்கு நேர்மையாக இருக்க வேண்டும்

இலக்கு மின்னிதழுக்கு நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வழங்கிய சிறப்பு நேர்காணல்

## கண்ணீரில் கரைந்தது முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம்







## கைதுசெய்யப்பட்ட 500 போராளிகளுக்கும் 27 குழந்தைகளுக்கும் என்ன நடந்தது சிவசக்தி ஆனந்தன் கேள்வி

## ஐ.நா மன்றம் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கியதால் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம்

காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் முல்லைத்தீவு இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஷ்வரி



## வட்டுவாகல் – இன அழிப்பின் சாட்சி நிலத்திலிருந்து ஒரு போராட்டம்

தீபச்செல்வன்



# கண்ணீரில் கரைந்தது முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம்

- கையளித்த எமது உறவுகள் எங்கே? கையளித்த குழந்தைகளை என்ன செய்தீர்கள்?
- கடும் வெயில் காரணமாக சில தாய்மார்கள் மயக்கம் அடைந்தனர்.
- கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை




*2019 இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே என்ற தொனிப்பொருளில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.*

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

## புதிய பயங்கரவாத சட்டத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம் தமிழர் போராட்டங்களை முடக்க முனைகிறதா கூட்டமைப்பு

### தமிழ் புத்தி ஜீவிகள் கேள்வி



அமுலில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு புதிய பயங்கரவாத தடைச்சட்டம் அமுலாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அச்சட்ட மூலம் தொடர்பில் கூட்டமைப்பின் சட்ட வல்லுனர்கள் மௌனமாக இருப்பதன் பின்னணி தொடர்பில் தமிழ் புத்திஜீவிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

தற்போதைய பயங்கரவாத சட்டம் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக சர்வதேச நியமங்களுடன் புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் அமுலாக்கப்படவுள்ளதாக அரசாங்கம் ஜெனீவாவிலும் உள்நாட்டிலும் அறிவித்துள்ளது. இதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு உயர்நீதிமன்றத்திற்கு வியாக்கியானம் கோரலுக்காக

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

## எதற்காக வரவு செலவுத்திட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு? தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

2019ஆம் ஆண்டுக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதற்காக நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியுள்ளது என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் மையம் விடுத்துள்ள அறிக்கையில்

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்சிமாற்றத்தின் மூலம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தமான முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்ற தோரணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நூறுநாள் வரவு செலலுத்திட்டம் முதல் பின்னர் ஐ.தே.க, சுதந்திரக்கட்சி கூட்டு அரசாங்கங்களின் வரவு செலவுத்திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் நிபந்தனையற்ற ஆதரவையே வழங்கி வருகின்றது.

மேற்படி வரவு செலவுத்திட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கினாலும், குறித்த வரவு செலவுத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான இறுதி நாளன்று வாக்கெடுப்பிற்கு சற்றே முன்னர் அரச தலைவர்களுடன் பகட்டுக்காக கூட்டமைப்பு சந்திப்புக்களை நடத்தும். அந்த சந்திப்புக்களில் அளித்த வாக்குறுதியின் காரணமாகவும், புதிய அரசியலமைப்பு பணிகள் தடைப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும், ஜெனீவாவில் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வைப்பதற்காகவுமே வரவு செலவுத்திட்டத்தினை ஆதரிப்பதாகவும் அர்த்தம் கற்பித்து வந்தனர்.

அப்படியிருக்க தற்போது கூட்டமைப்பு எதற்காக ஆதரவளித்தது என்றொரு கேள்வி இங்கு எழுகின்றது. புதிய அரசியலமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவில்லை, ஜெனீவா தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்பதும் தெட்டத் தெளிவாகி விட்டது. ஒக்டோபர் புரட்சியின் போது ஐக்கிய தேசியக் கட்சி தனது தலைமையில் அரசாங்கத்தினை அமைப்பதற்காக வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதாய் இல்லை.

தென்னிலங்கை தலைமைகளுக்குள் நிலவும் அதிகாரப்போட்டிக்குள் நியாயமான அரசியல் தீர்வு முதல், அன்றாட வாழ்வுக்கான அடிப்படை கோரிக்கைகள் வரையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எந்தவொரு விடயத்தினையும் சீர்தூக்கிப்பார்க்கப் போவதில்லை என்பதை தற்போதைய ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர;. இந்த நிலைமையிலும் ஐ.தே.க அரசாங்கத்திற்கு கூட்டமைப்பு முண்டு கொடுக்க வேண்டிய அவசியம் தான் என்ன?

மேலும் இந்த வரவு செலவுத்திட்டமே தற்போதைய ஆட்சியாளர்களின் இறுதி வரவு செலவுத்திட்டமாகின்றது. இவ்வாறிருக்க இந்த வரவு செலவுத்திட்டத்திலும் கூட நிபந்தனையின்றி சரணாகதி அரசியல் செயற்பாட்டினை பிரதிபலிக்க வேண்டிய அவசியம் தான் என்ன? உரிமைகளையும், நீதியையும் எதிர்பார்த்துள்ள ஒரு இனத்தின் பிரதிநிதிகளாக இருக்கும் கூட்டமைப்பினர் இவ்வாறு நிபந்தனை இன்றி ஆதரவளிப்பதானது அவர்களுக்கு உள்ள உரிமைப்போராட்டத்தின் மீதான பற்றுறுதியை செவ்வனே பகிரங்கப்படுத்துவதாய் இருக்கின்றது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம் →

## உச்ச பட்சமாக இராணுவம் காணிகளை விடுவித்துள்ளது கூட்டமைப்பு எம்.பி.க்களை அதிரவைத்த சம்பந்தன் உரை



இலங்கை அரச படைகளிடம் நிலத்தை பறிகொடுத்து வீதியில் நிற்கும் கேப்பாபுலவு சிறுவர்கள்

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதில் இராணுவத்தினருடன் இணைந்து செயற்படுவதற்குத் தான் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதி செலலணிக் கூட்டத்தில் அறிவித்திருப்பது கூட்டமைப்பு எம்.பி.க்கள் பலருக்கும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வடக்கு அபிவிருத்தி குறித்த ஜனாதிபதிச் செயலணியின் கூட்டத்திலேயே இந்த அறிவிப்பை சம்பந்தன் வெளியிட்டிருக்கின்றார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பாராளுமன்றக் கட்டடத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. கூட்டமைப்பு எம்.பி.க்கள் உட்பட அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டிருந்தார்கள்.

பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதாக அரசாங்கம் சொல்லிக்கொள்ளும் அதேவேளையில்,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

## கைதுசெய்யப்பட்ட 500 போராளிகளுக்கும் 27 குழந்தைகளுக்கும் என்ன நடந்தது சிவசக்தி ஆனந்தன் கேள்வி




இன்று முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இருந்து வட்டுவாகல் கடற்படை முகாம்வரை பேரணியாக சென்றடைந்தது.

இப்பேரணியில் கலந்து கொண்ட வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட 500 க்கும் மேற்பட்ட போராளிகள் மற்றும் 27 குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்வியை எழுப்பினார். தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கடந்த பத்து வருட காலமாக தங்கள் உறவுகளை தேடிக்கொண்டு பல போரட்டங்களை




நடாத்திக்கொண்டு இருக்கின்றார்கள் இதற்கு ஐநா மனித உரிமைபேரவையும் அரசாங்கமும் பதில் சொல்ல வேண்டும். உயிருடன் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள்

தொடர்ச்சி 7ஆம் பக்கம் →

## இன்று கொழும்பு வருகிறார் இந்திய பாதுகாப்புச் செயலர்



இந்திய பாதுகாப்பு செயலர் சஞ்சய் மித்ரா, சிறிலங்காவுக்கான இரண்டு நாட்கள் பயணத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவுள்ளார். கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரு தரப்பு பாதுகாப்பு கலந்துரையாடலில் பங்கேற்கவே இந்திய பாதுகாப்புச் செயலர் கொழும்பு வரவுள்ளார்.

இரண்டு நாட்கள் சிறிலங்காவில் தங்கியிருக்கும் போது அவர், சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோ, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன, மற்றும் முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார். அத்துடன், பல்வேறு உயர்மட்டப் பிரமுகர்களையும் இந்திய பாதுகாப்புச் செயலர் சந்தித்துப் பேசவுள்ளார். இரண்டு நாடுகளும் எதிர்கொள்ளும் பாதுகாப்பு சவால்கள், குறித்தும், பாதுகாப்புச் செயலர்கள் மட்டத்தில் நடத்தப்படவுள்ள பேச்சுக்களின் போது கலந்துரையாடப்படவுள்ளது. இந்திய பாதுகாப்பு செயலர் சஞ்சய் மித்ரா கண்டி மற்றும் அனுராதபுர ஆகிய இடங்களுக்கும் செல்லவுள்ளார்.

2ஆம் பக்க தொடர்ச்சி → **எதற்காக வரவு செலவுத்திட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு?**

காணி விடுவிப்பு, திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கல், இராணுவத்தின் ஆக்கிரமிப்பு, காணாமலாக்கப்பட்டவர்கள் விடயம், அரசியல் கைதிகள் விடயம் என எத்தனையோ பிரச்சினைகள் இருக்கையில் அவை எதனையும் ஒரு நிபந்தனையாக கூட வைக்க முனையவில்லையே கூட்டமைப்பு.

மத்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கம்பெரலிய திட்டம் தமிழர் தாயகத்தில் கூட்டமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுவதாலும், அத்திட்டத்தினை மேற்பார்வை செய்வதற்காக கூட்டமைப்பின் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்நாட்டு அமைச்சின் ஊடாக தலா இரண்டு இலட்சம் மாதாந்தம் வழங்கப்படுவதாலுந்தான் கூட்டமைப்பு நிபந்தனை விதிக்காது மண்டியிட்டு விட்டதா?

அப்படியென்றால் அடுத்த தேர்தல்களில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மத்திய அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டம் தான் கம்பெரலிய என்பதை அறியாது, தமிழர்களின் இனவிடுதலை வேட்கையை கம்பெரலியவுக்குள் கட்டுப்படுத்தி இனத்துரோகமிழைக்கிறதா கூட்டமைப்பு என்ற கேள்விகள் தொடர்ச்சியாக எழுகின்றன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் நடந்தது என்ன?

இனவிடுதலைக்கான உரிமைப்போராட்டத்தினை பயங்கரவாதமாகச் சித்தரித்து இலங்கை அரசாங்கங்களால் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் போரின் இறுதி நாளில் “ஒரு நிமிடமேனும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்புடன் தொடர்பினைப் பேணியிருந்தால் படையினரிடத்தில் கூறி சரணடையுங்கள்” என்ற அறிவிப்புச் செய்யப்பட்டது.

இதனால் முல்லைத்தீவிலிருந்து வட்டுவாகல் பாலம் ஊடாக வெளியேறிக் கொண்டிருந்த பொதுமக்களில் இளைஞர்கள் யுவதிகளில் ஏறக்குறைய கணிசமானனோர் படைத்தரப்பின் கழுகுப்பிடிக்குள் சிக்குவதை விடவும் சரணடைவதே மேல் என்ற சிந்தனைக்குள் தள்ளப்படுகின்றார்கள். போரின் நெருக்கடிக்குளிலிருந்து உயிரை மட்டுமே மீதமாக கொண்டு வந்திருந்தவர்கள் இந்த வார்த்தைகளை நம்பி படையினரிடத்தில் சரணடைந்தார்கள்.

இதற்கும் ஒருபடி மேலாக அருட்தந்தை பிரான்ஸிஸ் சாட்சியாக விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களான பாலகுமாரன், அவருடைய மகன் சூரியத் தேவன், தங்கன், இளம்பரிதி, ராஜா, என போராளிகள் சரணடைந்தார்கள். இவர்கள் மட்டுமன்றி சிறுவர்கள் பலரும் படையினரிடத்தில் கையளிக்கப்பட்டனர். இவை அனைத்துமே வட்டுவாகல் பாலத்திலேயே நடைபெற்றது.

ஆனால் இவ்வாறு கையளிக்கபட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களுக்கு எல்லாம் என்ன நடந்தது என்பது பற்றி தற்போது வரையில் எந்தவொரு தகவல்களும் இல்லாத நிலைமையே நீடிக்கின்றது. இவ்விடயம் சம்பந்தமாக கேள்வி எழுப்பப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் படைத்தரப்பினரும் சரி, ஆட்சியாளர்களும் சரி பதிலளிப்பதாக இல்லை.

மறுபக்கத்தில் இலங்கையின் நீதித்துறை ஊடாக முயற்சியொன்றும் எடுக்கப்பட்டது. படையினரிடத்தில் கையளிக்கப்பட்டு தற்போது வரையில் என்ன நடந்தது என்பது தெரியாது உள்ள உறவினர்களால் ஆட்கொணர்வு மனு வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டது. இருப்பினும் முல்லைத்தீவில் சம்பவம் இடம்பெற்றிருப்பதால் முல்லைத்தீவு நியாயதிக்கத்திற்கு உட்பட்ட மன்றே விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்ற அடிப்படையில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திற்கு வழக்குகள் மாற்றப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன.

இதன்போது படைத்தரப்பினரிடத்திலிருந்து நீதிமன்றத்திற்கு உரிய தகவல்கள் வழங்கப்படுவதில் நத்தை வேகமே காணப்படுகின்றது. அத்துடன் ஆட்கொணர்வு மனுக்களை நிராகரிக்கும் அளவிற்கு நிலைமைகளும் ஏற்பட்டிருந்தன. ஆக, இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்புக்குள்ளாலும் இந்த விடயத்தினை அறிந்து கொள்வது முயற்கொம்பான காரியமே என்பது மேற்படி ஆட்கொணர்வு மனு இழுத்தடிப்புச் செய்யப்படுவதிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகின்றது.

திருகோணமலையில் பொலிசார் பார்த்துக்கொண்டு இருக்கையில் 154 விவசாயிகளை வெட்டிக் கொலை செய்த சம்பவத்துடன் ஆரம்பித்த இனப்படுகொலையானது 2009ஆம் ஆண்டு இறுதி போர் வரையில் தொடர்ந்திருந்தது. திட்டமிட்டு தமிழ் மக்கள் கொத்து கொத்தாக இனப்படுகொலை செய்யும் செயற்பாடுகள் தமிழ் தாயகத்திலே சிங்கள ஆட்சியாளர்களினால் முப்படைகளின் துணையுடன் அரங்கேறி வந்திருக்கின்றன. வந்துகொண்டிருக்கின்றன.

அவ்வாறிருக்கையில், வட்டுவாகல் பாலத்தில் வைத்து தமது கைகளால் நேரடியாக படையினரிடத்தில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும் இன்று ஞாயிற்றுக்கிழமை உறவுகளைக் கையளித்தவர்கள் அனைவரும் வட்டுவாகல் பாலத்தில் அணிதிரண்டுள்ளனர்.

இந்த உணர்வு ரீதியான கவனயீர்ப்பு போராட்டம் இலங்கை அரசாங்கத்தினையும், படையினரையும் சினம் கொள்ள வைப்பதாகவே இருக்கும். பல்வேறு தடைகளையும் தாண்டியே பாதிக்கப்பட்டவர்கள் இந்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர் காருண்ணியம் பற்றி பேசும் பௌத்த சமயத்தினை ஏற்றுக்கொண்டிருக்கும் சிங்கள தேசம் உறவுகளை தொலைத்து விட்டு அவர்களுக்காக கண்ணீருடன் ஏங்கி நிற்கும் அந்த வலிநிறைந்த உணர்வுகளை ஒருபோதும் உணரப்போவதில்லை.

அதற்காக, நியாயத்தினை மறுதலித்து போனவர்கள் போகட்டும் என்று செல்ல முடியாது. படையினரிடத்தில் உறவுகளை கையளித்தவர்கள் உள்ளார்கள். யாரிடம் கையளித்தோம் என்பதை அறிந்தவர்கள் உள்ளார்கள். இப்படி நேரடிச்சாட்சிகள் பல உள்ளன. இத்தரப்புக்களின் உணர்வுக்கான உரிமைக் கோரிக்கையை உதாசீனம் செய்ய முடியாது. உள்நாட்டைத் தாண்டி உறவுகளுக்கான வட்டுவாகலில் இன்று முன்னெடுக்கப்பட்ட உரிமைக்கோரிக்கை நிச்சயம் உலகத்தின் பார்வையை பெறும்.

இந்த நம்பிக்கையுடனும், பற்றுறுதியுடன் 7ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள உறவுகளுக்கான உரிமைக்குரல்களுக்கு உரம் சேர்க்கும் வகையில் தாயக உறவுகள் அனைவரும் அணிதிரள்வதே சாலப்பொருத்தமானது. வாய்மைக்கும் பொய்மைக்குமான போராட்டம் இது. எமது உறவுகளுக்களுக்காக அணிதிரண்டு எம்மினத்தின் வாழ்வுரிமையை நாமே உறுதி செய்யவதே காலத் தேவையானது..

2ஆம் பக்க தொடர்ச்சி →

## கண்ணீரில் கரைந்தது முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம்



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இருந்து வட்டுவாகல் கடற்படை முகாம்வரை இப் பேரணி சென்றடைந்தது. இப் பேரணியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பெருந்திரளானோர் கலந்துகொண்டு கொளுத்தும் வெயிலையும் பாராமல் பல மைல் தூரம் அரசுக்கு எதிராக கோசம் எழுப்பியவாறு நடந்து சென்றனர்.

இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட 500க்கும் மேற்பட்ட போராளிகள் மற்றும் 27 குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்று அரசாங்கம் கூறவேண்டும் என்பவற்றை வலியுறுத்தி இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். எமது கோரிக்கைகளை பலமுறை முன்வைத்த போதும் இதுவரை ஐ.நா மனித உரிமை ஆணையகமோ, அரசாங்கமோ எவ்வித தீர்வும் தரவில்லை. எமக்கு நீதியானதும், நியாயமானதுமான தீர்வு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் கலந்துகொண்ட காணாமல் ஆக்கப்படவர்களின் உறவினர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

## வட்டுவாகல் பாலத்தில் இன அழிப்பு கண்காட்சி

இறுதி யுத்தத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட வட்டுவாகல் பாலத்தில் உத்தரிப்புக்களின் அல்பம் கண்காட்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நீதி - ஏக்கம் - கண்ணீர் எனும் தலைப்பிலான ஒளிப்படக் கண்காட்சியின் காண்பியல் 2 வட்டுவாகல் பாலம் முல்லைத்தீவில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5மணி வரை இடம்பெறுகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக வடக்கு, கிழக்கெங்கிலும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றமை யாவரும் அறிந்ததே. அவர்களின் துயரத்தை ஒளிப்படங்கள்



மூலம் ஆவணமாக்கிய ஊடகவியலாளர் கே.குமணன் முறைப்படுத்தப்பட்ட கண்காட்சியாக நடத்தி வருகின்றார். அதிலும் இறுதி யுத்த சாட்சியங்களை மூடி மறைத்து வைத்துள்ள கோத்த கடற்படை தளம் முன்பாக கண்காட்சி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2ஆம் பக்க தொடர்ச்சி →

## உச்ச பட்சமாக இராணுவம் காணிகளை விடுவித்துள்ளது

புதிதாக பல்வேறு காரணங்களைக் கூறி காணிகள் சுவீகரிக்கப்படுவதாக கூட்டமைப்பு எம்.பி.கள் பலரும் இங்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். இதனால், கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

இதனால், ஒரு கட்த்தில் தலையிட்ட சனாதிபதி, இவ்வாறு தர்க்கத்தில் ஈடுபட இது பாராளுமன்றம் அல்ல. இரு மாகாண ஆளுநர்கள் தலைமையில், வடக்கிலும் கிழக்கிலும் சந்தித்து இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுங்கள் எனத் தெரிவித்து பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைக்க முயன்றார்.

இதன்போது திடீரென உரையாற்றிய சம்பந்தன், "பொதுமக்களின் காணிகளை இராணுவம் உச்ச பட்சமாக விடுவித்துள்ளது. இன்னும் சில பகுதிகளை மட்டுமே விடவேண்டியுள்ளது. இந்த விடயத்தில் இராணுவத்துடன் இணைந்து செயற்பட நாம் தயார்" எனக் குறிப்பிட்ட போது, இராணுவ அதிகாரிகளுடன் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த கூட்டமைப்பு எம்.பி.க்கள் அதிர்ச்சியடைந்தனர்.

மாவை, சுமந்திரன், சிறிதரன் போன்றவர்கள் படையினர் புதிதாக காணிகளை சுவீகரிப்பதைத் தடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி உரையாற்றிய நிலையில் சம்பந்தன் இவ்வாறு கூறியது அவர்களுக்கும் அதிர்ச்சியளித்திருந்தது. சனாதிபதிக்கு அருகில் சம்பந்தன் அமர்ந்திருக்க ஏனைய எம்.பி.க்கள் அதிகாரிகள் கீழே அமர்ந்திருந்தார்கள்.

இந்தக் கூட்டத்துக்கு முன்னதாக சனாதிபதியை தனியாகச் சந்தித்துப்பேசும் நோக்கத்துடன் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோர் அரை மணி நேரம் முன்னதாகவே வந்திருந்தார்கள். தாம் காத்திருப்பதையிட்டு சனாதிபதிக்கும் தெரியப்படுத்தியிருந்தார்கள். ஆனால், தமது அலுவலக அறையில் இருந்த மைத்திரி, கூட்டமைப்பினரை தனியாகச் சந்திப்பதைத் தவிர்க்கும் வகையில் தாமதமாகவே கூட்ட மண்டபத்துக்கு வந்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

2ஆம் பக்க தொடர்ச்சி →

## புதிய பங்கரவாத சட்டத்திற்கு

அனுப்பட்டு தற்போது பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு உயர் நீதிமன்றின் வியாக்கியானத்துடன் மீண்டும் அனுப்பபட்டுள்ளது.

இந்நிலையில் இந்தச் சட்டமூலமானது, பொலிசாருக்கு அளவு கடந்த அதிகாரங்களை வழங்குவதோடு, நீதித்துறையினரின் தலையீடுகளையும் வெகுவாக கட்டுப்படுத்துவதாக உள்ளது. அதுமட்டுமன்றி தொழிற்சங்க போராட்டங்கள் உட்பட எந்தவொரு போராட்டங்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டதாகவும் காணப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக சனநாயகத்தினை மறுதலிக்கும் ஒரு அவசரகால சட்டம் சாதாரண சட்டமாக போகின்றது என்பதே யதார்த்தமாகவுள்ளது.

இத்தகைய ஆபத்தான நிலைமைகள் இருக்கின்ற நிலையில் இந்தச் சட்டமூலம் குறித்து கூட்டமைப்பின் சனநாயகப் போராளிகளும், சட்ட வல்லுனர்களும் அமைதியாக இருக்கின்றார்கள். இதற்கான பின்னணி என்னவாக இருக்கும் என்ற பெரும் கேள்வி இவ்விடத்தில் எழுகின்றது.

அரசாங்கம் கூட்டமைப்புக்கு அளித்த வாக்குறுதிகளும், கூட்டமைப்பு ஆணைபெற்ற வாக்குறுதிகளும் காற்றில் பறந்துள்ள நிலையில் தமது கோரிக்கைகளை முன்வைத்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தாமாகவே தாயகத்தில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். இந்த போராட்டங்களின் தாக்கம் சர்வதேசம் வரையில் சென்றுள்ள நிலையில் அந்தப்போராட்டங்களின் பிரதிபலிப்பினை ஜீரணிக்க முடியாத நிலையிலேயே ஆணைபெற்ற கூட்டமைப்பு உள்ளது.

ஆகவே இப்போராட்டங்களை மலினப்படுத்தி அவற்றை இல்லாது ஒழித்துவிடலாம் என்று எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டாலும் அவை வெற்றியளிக்காத தருணத்தில் மேற்படி புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தினை அரசாங்கத்துடன் இணைந்து அமுலாக்குவதன் மூலம் தமக்கு தலையிடியாக இருக்கும் போராட்டங்களை இல்லாது ஒழித்து விடலாம் என்ற பின்னணியில்த்தான் கூட்டமைப்பு சூட்சுமமாக செயற்பட்டு வருகின்றது. இருப்பினும் இலங்கை தமிழரசுக்கட்சியின் கொழும்புக் கிளை தலைவர் சனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராஜா இந்த சட்டத்தின் ஆபத்தை புட்டு வைத்துள்ளதோடு, இச்சட்டம் அமுலானால் தற்போது சிறையில் வாடிக்கொண்டிருக்கும் உறவுகள் விடுதலையாகப்போவதில்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆகவே அரசியல் கட்சியொன்றின் கருத்துக்கள் இரண்டாக மூன்றாக இருக்க முடியும். ஆனால் நிலைப்பாடு ஒன்றாகத்தான் இருக்க முடியும். அதனடிப்படையில் கூட தமிழரசுக்கட்சியினுள்ளோ அல்லது கூட்டமைப்பினுள்ளோ இந்த சட்டமூலம் தொடர்பில் போதிய விளக்கமோ அல்லது ஏகோபித்த நிலைப்பாடோ இல்லாத சூழல் தான் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த சட்டமூலம் அமுலாக்குவதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையிலும் கூட்டமைப்பினரின் மௌனம் கலைக்கப்படாமல் உள்ளமையானது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் முழுமையாக கூட்டமைப்பு சென்றடைந்து விட்டது என்பதையே வெளிப்படுத்தி நிற்பதாக அமைகின்றது.

# யதார்த்த அரசியலை மேற்கொள்வதாக கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மக்களுக்கு நேர்மையாக இருக்க வேண்டும்

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**

**தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தாயகம் தமிழகம் புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் ஓய்வு பெற்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்.**



**கேள்வி:சர்வதேச விசாரணை குறித்து நீங்கள் தெரிவித்த கருத்துக்கள், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனால் விமர்ச்சிக்கப்படுகின்றமை குறித்து உங்களின் கருத்து என்ன?**

பதில்; அவர் இதைமட்டுந்தானா விமர்சிக்கின்றார்? நான் தமிழ் மக்கள் நலன்சார்ந்து எதைக் கூறினாலும் அதைத் திரிபுபடுத்தி விமர்சிப்பதால் அவர் தன்னைத்தானே தரந்தாழ்த்திக் கொண்டிருக்கின்றார். அண்மையில் நடந்த ஐ. நா மனிதவுரிமை கூட்டத் தொடரில் அரசாங்கம் சர்வதேச நீதிபதிகளை உட்படுத்தி விசாரணை செய்ய இலங்கை சட்டத்தில் இடமில்லை என்ற பொய்யான ஒரு வாதத்தை முன்வைத்தது. இது உலகநாடுகளை ஏமாற்றி பொறுப்புக்கூறல் பொறிமுறையிலிருந்து முற்றுமுழுதாக விலகுவதற்கான ஒரு நகர்வாகும். அரசாங்கத்தின் இந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பல வழிகளிலும் செயற்பட்டுவருகின்றது. இதன் ஒரு பகுதியாகத்தான், சனாதிபதி மைத்திரி எதிர்ப்பதாகவும் ஆனாலும் பிரதமர் ரணில் சிலவற்றை செய்ய முயற்சிக்கின்றார் என்றும் கருத்துக்களை முன்வைத்து அரசாங்கத்தைக் காப்பாற்றும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்துக்களை முன்வைத்து எடுபிடி வேலை செய்து வருகின்றது. என்னைப் பொறுத்தவரையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் சனாதிபதியின் நிலைப்பாடும் அரசாங்கத்தின் நிலைப்பாடும் ஒன்றுதான். ஆனால், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு தமக்கிடையிலான முரண்பாடுகளைத் தந்திரமாகப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். விடுதலைப்புலிகளுடனான சமாதான நடவடிக்கைகளைக் குழப்பியது, சுனாமி நிவாரண முகாமைத்துவ கட்டமைப்பை குழப்பியது முதல் இன்றைய பொறுப்புக்கூறல் விடயம் வரை இந்த உத்தியைத்தான் கையாண்டு வருகின்றார்கள்.

அரசாங்கத்தின் இத்தகைய நாடகங்களை அம்பலப்படுத்தவே நான் பகவதி தலைமையிலான சர்வதேச பிரமுகர்கள் குழுவை ஒரு உதாரணமாகச் சுட்டிக்காட்டினேன். சர்வதேச தராதரங்களுக்கு அமையவும் வெளிப்படைத்தன்மையாகவும் இலங்கையின் உடலகம ஆணைக்குழு செயற்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி சர்வதேச குழு தன்னைத்தானே கலைத்து இலங்கையில் இருந்து வெளியேறியமையைச் சுட்டிக்காட்டி ஏன் எமக்கு சுயாதீன சர்வதேச விசாரணை அவசியம் என்பதை வலியுறுத்தி இருந்தேன்.

ஐ. நா மனிதவுரிமை சபையில் சர்வதேச நீதிபதிகளின் பங்குபற்றுதலை நிராகரித்தவர்கள் எனது உதாரணத்துக்கு பதில் அளிக்க முடியாத நிலையில், அவர்கள் சார்பில் சில எடுபிடிகள் அதனைத் திரிபுபடுத்தி விமர்சனம் செய்து திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும் என்று பல தடவைகள் நான் வலியுறுத்தி வந்துள்ளேன். இதனை எழுத்தில் ஐ. நா மனித உரிமைகள் சபை ஆணையாளருக்கும் சபையின் உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளேன்.



ஆனால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எவ்வாறு சாத்தியம் என்று பரிகாசம் செய்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் ஜெனீவாவில் அரசாங்கத்தைக் காப்பாற்றிவிட்டு கூட்டம் முடிந்தபின் இங்கு வந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு செல்ல நேரிடும் என்று எச்சரிக்கை விடுக்கின்றார். அதேபோல, சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று மீண்டும் மீண்டும் தர்க்கம் செய்துவந்த இந்தப் பேச்சாளர் இப்போது சர்வதேச விசாரணை பற்றி பேசுகின்றார். வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியம் இல்லை என்று அவர் முன்பு கூறினார். அதேபோல, சமஷ்டி வேண்டாம் என்றும் பௌத்த மதம் இலங்கையில் முதன்மை மதமாக இருக்கலாம் என்றும் புதிய அரசியலமைப்பு நடவடிக்கைகளில் ஒத்துக்கொண்டு வந்தவர்தான் இவர்.

தேர்தல் காய்ச்சல் அவரை குழப்பிவிட்டுள்ளது போலும். இதனை எமது கட்சியின் கொள்கைபரப்பு பேச்சாளர் அருந்தவபாலன் அவர்கள் 'முதலை கண்ணீர் வடிக்கும் செயல்'' என்று குறிப்பிட்டுள்ளதை நினைவுபடுத்துகின்றேன்.

யதார்த்த அரசியலை மேற்கொள்வதாக கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு நேர்மையாக இருக்க வேண்டுமானால் தமது உண்மையான நிலைப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும். “வடக்கு-கிழக்கு இணைப்பு தேவை இல்லை'',“சமஷ்டி வேண்டாம்'',“பௌத்த மதமே இலங்கையில் முதன்மை மதம்'',“போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை மறப்போம் மன்னிப்போம்''.“இனப்படுகொலை நடக்கவில்லை'' என்பனவற்றை தமது புதியதொரு தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுத்தில் முன்வைத்து எமது மக்களிடம் ஆணை கேட்டு வெல்ல முன்வரவேண்டும்.

**கேள்வி: விக்கினேஸ்வரனும், சுமந்திரனும் ஒன்றுதான் என்ற வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளமை குறித்து உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

பதில்: இதற்கான பதில் உங்களது முதலாவது கேள்விக்கான பதிலில் உள்ளது. விமர்சனம் செய்வதற்கு எல்லோருக்கும் உரிமை உள்ளது.

**கேள்வி: வடமாகாண சபையின் 5 வருடங்கள் முதலமைச்சராக இருந்துள்ளீர்கள். இந்தக் காலத்தில் உங்களுடைய சாதனை என எதனைக் கூறுவீர்கள்? எப்படியாவது செய்ய வேண்டும் என முயன்றும் முடியாமல் போனது என எதனைக் குறிப்பிடுவீர்கள்? அதற்குக் காரணம் என்ன?**

பதில்: மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கு முரணாகாமல் நான் செயற்பட்டுள்ளேன். 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழான மாகாணசபையின் வலுவற்ற தன்மையால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரை முழுமையாகத் துடைக்க என்னால் முடியாவிடினும் அவர்களுக்கான குரலாக நான் என்னால் முடிந்தவரை இருந்துள்ளேன். அதன் வெளிப்பாடே வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனவழிப்புத் தீர்மானமாகும். இது எமது கூட்டுப் பொறுப்பின் உச்ச வெளிப்பாடாகும். மற்றும்படி நான் சாதனை செய்வதற்கு மக்களின் கண்ணீரை பயன்படுத்துபவனல்ல. மத்திய அரசாங்கப் பிரமுகர்களுக்குப் பல்லிளித்துப் பயன் பெறப் பார்ப்பவனும் அல்ல.

முடியாமல்போன விடயம் வடமாகாண முதலமைச்சர் நிதியம். இதன் மூலம் எமது புலம்பெயர் உறவுகளிடமிருந்து உதவிகளைப் பெற்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எம்மக்களை நாமே வலுப்படுத்தக்கூடியதாகஇருந்தது.

## தொடர்ச்சி

ஆனால் முதலமைச்சர் நிதியம் உருவாகினால் அது எனக்கு நற்பெயரை ஏற்படுத்திவிடும் என்று அரசாங்கத்தினர் நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் இந்த நிதியத்தை ஏற்படுத்துவதற்காக எந்தச் சந்தர்ப்பதிலும் அரசாங்கத்தை வலியுறுத்தவில்லை. மாறாக சிலர் அதைத் தடுக்க கரவு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். கட்சி நினைத்திருந்தால் நிதியத்தை உருவாக்க ஒத்துழைத்திருக்கலாம்.

முதலமைச்சர் நிதியந்தானா தேவை வேறுவழிகளில்ப் பணத்தைப் பெற்று செயற்திட்டங்களை செய்திருக்கலாமே என்று சிலர் கேட்கின்றார்கள். வேறுவழிகளில் பெற்றால் அரசாங்கம் நாளை காரணங்களைக் கண்டுபிடித்து அந்த நிதியை முடக்கலாம் அல்லது மக்களுக்கான செயற்திட்டங்களை முடக்கலாம். TRO வின் பணத்துக்கு என்ன நடந்தது? அது எம்மக்களின் பணம்தானே? அந்தப் பணத்தையாவது எம்மக்களின் வாழ்க்கையை மீள்கட்டியெழுப்ப பயன்படுத்தியிருந்திருக்கலாமே.



**சனாதிபதி மைத்திரி பிரதமர் ரணில் ஆகியோரின் உரையாடலுக்குள் சிக்கிக் கொண்டுள்ள தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா**

அரசாங்கத்தைக் கண்டிக்காமல், இராணுவத்தைக் கண்டிக்காமல், இனப்படுகொலை பற்றி பேசாமல், அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டிருந்தால் பல மடங்கு பணத்தை வட மாகாண சபைக்குத் தந்திருப்பார்கள். எமது முயற்சிகளுக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டிருக்காது. ஆனால் அவ்வாறு செயற்பட்டிருந்தால் எமது மக்களின் நீண்ட கால உரிமைகளையும் இனப்படுகொலைக்கான எமது நீதியையும் சலுகைகளுக்காக விட்டுக்கொடுத்து ஒரு பெருந் துரோகத்தை எமது மக்களுக்கு இழைத்திருப்பேன்.

நான் முதலமைச்சராக பணி ஏற்றபோது, என் முன்னே இருந்த மிகப்பெரும் பணியாக தோல்வி மனப்பான்மையுடன் விரக்தியின் விளிம்பில் நின்ற எமது மக்களுக்கு அவர்களின் உரிமைகளையும் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நீதியையும் வலியுறுத்தித் தெம்பூட்டுவதே என்று உணர்ந்திருந்தேன். அந்தவகையில், எமது மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் நீதி ஆகியவற்றை எமது மக்கள் மத்தியிலும், சர்வதேச சமூகம் மத்தியிலும் வலியுறுத்துவதற்கு எனது முதலமைச்சர் பதவியை முடிந்தளவுக்குப் பயன்படுத்தி இருக்கின்றேன்.

கூட்டமைப்பின் தலைவர்கள் சலுகைகளையும் பதவிகளையும் சொகுசுகளையுந் தேடியதால்தான் இன்று எம்மக்கள் நடுத்தெருவில் நின்று போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெறத் தெரிந்தவர்களுக்கு, பாராளுமன்ற சனநாயகத்தை உச்ச நீதிமன்றம் ஊடாக நிலைநாட்டியதாகப் பெருமை கூறுபவர்களுக்கு முதலமைச்சர் நிதியத்தைப் பெற்றுத்தரத் தெரியவில்லையே? அரசியல் கைதிகளை விடுவிக்கத் தெரியவில்லையே? எமது காணிகளை விடுவிக்கத் தெரியவில்லையே? பயங்கரவாதத் தடை சட்டத்தைப் பின்வாங்க அரசாங்கத்திற்கு நெருக்குதலைத் தரமுடியவில்லையே? இராணுவத்தை எமது மண்ணில் இருந்து வெளியேற்றத் தெரியவில்லையே? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை மனதில் நிறுத்தி செயற்பட்டிருந்தால் ஆகக் குறைந்தது இவற்றில் பலவற்றை செய்திருந்திருக்க முடியும்.

**கேள்வி: வடமாகாண சபை வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றியதைவிட வேறு எதனையும் உருப்படியாகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு ஒன்றுள்ளமை குறித்து உங்கள் பதில் என்ன?**

பதில்: ஒரு புறம் அதிகாரமற்ற சபை மறுபுறம் எமக்கெதிரான நிகழ்ச்சி நிரலூடான அரசாங்கத்தின் செயற்திட்டம். இவற்றுக்கிடையே எம்மவர்களே எம் கால்களை வாரிவிடும் செயற்பாடுகள் வேறு. இவற்றுக்கு மத்தியிலேயே நாம் செயற்படவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. எமது அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அபிலாசைகளை விட்டுக்கொடுக்காமல் என்னால் முடிந்தவரை செயற்பட்டுள்ளேன். என் அமைச்சு செய்தவற்றை நான் பட்டியலிட்டு ஆவணம் மூலம் வெளியிட்டுள்ளேன்.

**கேள்வி: புதிய கட்சி தொடங்கியுள்ளீர்கள். இது கூட்டமைப்புக்கான ஒரு மாற்றுத் தலைமையைக் கொண்டுவருமா? உங்களுடன் இணைந்து செயற்பட கஜேந்திரகுமார் அணி தயாராக இல்லை எனச் சொல்லப்படுகின்றதே? அவர்களுடன் பேசுகின்றீர்களா? மாற்றுக்கூட்டணி எவ்வாறு அமையும்?**

பதில்: மக்கள் இன்று தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை நன்கு அறிந்துள்ளார்கள். ஆகையினால் எமது மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஒரு நல்ல பாடம் புகட்டுவார்கள் என்று எண்ணுகின்றேன்.தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் துரோக வேலைகளினால், துரோகியை விட எதிரி பரவாயில்லை என்று சிந்திக்கக் கூடிய மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தென்னிலங்கைக் கட்சிகள் திட்டங்களைத் தீட்டி வருகின்றன. இதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைச் சரியாகக் கணிப்பிடாமல் செயற்படுவோமாயின் நாம் வரலாற்றுத் தவறை இழைத்தவர்கள் ஆவோம். ஆகவே,ஒத்தகொள்கை உடையவர்கள் தமது முன்பின் முரண்பாடுகளை ஒதுக்கிவைத்து ஒன்றிணைவார்களாயின் பலமான மாற்று அணியை நாம் உருவாக்க முடியும். இதன்மூலம், உருவெடுத்திருக்கும் எல்லாச் சவால்களையும் முறியடித்துப் பெருவாரியாக வெற்றிபெற்று எமது மக்களுக்கான ஒரு விடியலை நாம் ஏற்படுத்த முடியும். வரப்போகும் தேர்தல்களில் ஒற்றுமை இல்லாது போனால் அரசாங்கம் சார்ந்த கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிவிடும். பின்னர் பணம் கொடுத்து பதவி கொடுத்து வேலை கொடுத்து மாகாண மக்களை மத்தி வாங்கி விடும். பொருளாதார ருசி கண்ட எம் மக்கள் எந்தளவுக்கு உரிமைகளுக்காக அதன் பின் போராடுவார்கள் என்பது ஒரு பெரும் கேள்வி.

**கேள்வி: தற்போதைய ஆட்சியாளர்களால் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு வழங்கப்படும், இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீத நியாயம் வழங்கப்படும் என்று நம்புகின்றீர்களா?**

பதில்: நன்கு திட்டமிட்டு குற்றம் இழைத்தவர்கள் தாமாக உணர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க முற்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இனப்படுகொலை குற்றங்களைப் புரிந்ததாக ஆதாரங்களுடன் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக நல்லாட்சி அரசாங்கம் நியமனம் செய்துள்ளமை பொறுப்பு கூறுவது, நீதியை வழங்குவது போன்றவற்றை அரசாங்கத்திடம் எந்தளவுக்கு நாம் எதிர்பார்க்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. போரினால் பாதிக்கப்பட்டு தமது உறவுகளை இன்னமுந்தேடி வீதிகளில் நின்று எமது மக்கள் போராடிவரும் நிலையில் அவர்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் வகையில் சவேந்திரசில்வாவின் நியமனம் அமைந்திருக்கிறது.

சர்வதேச உறவுகளின் கோட்பாடுகளில் அண்மைய தசாப்தங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1648 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வெஸ்ட்ஃபேலியன் உடன்படிக்கை,நாடுகளின் முறைமை ஒன்று ஏற்பட வழிவகுத்தது. இறுதியில் நாடுகளின் சுயாதிபத்திய கோட்பாடு தோற்றம் பெறுவதற்கும் அது வழிவகுத்தது. ஆனால், இந்த சுயாதிபத்ய கோட்பாடு பின்னர் கணிசமான மாற்றங்களுக்கு உட்பட்டு இன்று சர்வதேச சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளின் ஊடாக உலகின் எந்த இடத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றாலும் அதற்கு பொறுப்பு கூறுவதற்கும் நீதி பெறுவதற்குமான பொறிமுறைகள் தாபிக்கப்பட்டுள்ளன. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா அக்கறை காட்டாதிருப்பதும் நீதி கிடைக்கப்பாடுபடாமல் இருப்பதும் சர்வதேச சமூகம் தனது தார்மீகக் கடப்பாட்டை உதாசீனம் செய்வதாகவே இன்று கருதப்படுகின்றது. சட்ட மற்றும் தார்மீக ரீதியிலான அடிப்படைகளின் படியே இன்றைய சர்வதேச உறவுகள் மற்றும் ஒழுங்குகள் அமைந்துள்ளன. ஒரு நாடு தனது சொந்த மக்கள் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வரையில் தான் அந்த நாடுகள் மீதான சர்வதேச சமூகத்தின் தலையிடாக் கொள்கை சட்டபூர்வமானது என்றும் சர்வதேச தலையீடானது ஒரு நாட்டின் சுயாதிபத்தியத்தை நிபந்தனைக்கு உட்படுத்தியது என்று கூறமுடியாது என்றும் மனித உரிமைகள் உதாசீனம் செய்யப்பட்டால் அல்லது முறையாக பாதுகாக்கப்படாவிட்டால் சுயாதிபத்தியம் அலட்சியப்படுத்தப்படலாம் என்றும் பிரான்சிஸ் டெங் என்ற இன்றைய கால சட்டஅறிஞர் கூறுகின்றார். இவை எல்லாம் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியும். அதனால் தான் மனித உரிமைகள் சபையை முற்றுமுழுதாக நிராகரிக்காமல் மகிந்த ராஜபக்ச முதல் இன்றைய தலைவர்கள் வரை அதனுடன் பட்டும் படாமலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஆகவே சர்வதேச ரீதியாக எமது நீதிக்கான வழிகள் இருக்கின்றன. அதேபோல பூகோள அரசியலை நன்றாக பயன்படுத்துவதன் மூலமும் எமது அண்டை நாடான இந்தியாவை எமக்கான நீதி மற்றும் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஊக்கப்படுத்துவதன் மூலமும் நாம் நிறையவே அடையலாம்.

**கேள்வி: அவ்வாறான நிலைமையொன்று ஏற்படாதவிடத்து அடுத்த கட்டம் என்னவாக இருக்கும்? இந்த விடயத்தில் இந்தியாவின் வகிபாகம் தொடர்பில் தங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில்:“இந்தியாவின் தென்கோடிப் பாதுகாப்பு” என்பது முற்று முழுதாக அதன் தொடர்ச்சியான வலுவான தமிழ் மக்களின் மூலமே ஏற்பட முடியும். இலங்கையின் வட-கிழக்கு தாயகத்தில் எவ்வளவுக்கெவ்வளவு உச்ச அதிகாரத்தில் தமிழ் மக்கள் இருக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு இந்தியாவின் பாதுகாப்பும் கூடுதல் பலம் பெறும். இதனை இன்றைய இந்திய கொள்கைவகுப்பாளர்கள் சரியாக உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும்.

சிங்கள அரசு என்பது காலம் காலமாக மகாவம்சத்தால் ஊட்டப்பட்ட இந்திய எதிர்ப்பு கொள்கையால் வளர்க்கப்பட்ட ஒரு அரசாகும். அதனுடன் எவ்வகையான பாதுகாப்பு உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் இந்தியாவின் பாதுகாப்பென்பது கேள்விக்குறியாகவேயிருக்கும். ஏன் 1987 இந்தியஇலங்கை ஒப்பந்தத்துக்கு

## தொடர்ச்சி

என்ன நடந்தது? இன்று இத்தீவில் என்ன நடைபெறுகின்றது? இந்தியாவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? சிறிலங்கா தொடர்ச்சியாக இந்தியாவின் புறமுதுகில் குத்திக் கொண்டே வருகிறது. சீனாவுக்கு ஏற்கனவே எமது காணிகள் சிலவற்றின் பரிபாலன அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கைத் தீவில் உள்ள இந்தியாவின் நம்பிக்கைக்குரிய உற்ற நண்பர்கள் இங்கு வாழும் தமிழ் மக்களே. அதைப்போலவே சர்வதேச சமூகத்தில் எமக்கு இருக்கும் உற்ற நட்பு சக்தியான இந்தியா எமக்கு உதவுவதற்கு கடமைப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்தியா எம்மக்களுக்கு இணைந்த வடக்கு கிழக்கில் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் எமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் இனப்படுகொலைக்கு நீதியைப் பெற்றுத்தரவும் சர்வதேச அளவில் உதவிட முன்வரவேண்டும். நாமும் அதற்கான தொடர் முயற்சிகளை இந்திய அரசுடன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். என்னை இந்திய அரசின் கையாளாக சிலர் அடையாளப்படுத்தி வருகின்றார்கள். என்னை இந்திய அலுவலர்கள் எவருமோ அவர்களைச் சார்ந்த வேறெவருமோ இதுவரையில் நாடியதில்லை. இந்தியா பற்றிய என் கணிப்பு யதார்த்தமானது. சர்வதேசம் மற்றும் உள்நாட்டு நிலைமைகளைப் புரிந்து கொண்டு என் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றேன். சிந்தித்தால் உண்மை புரியும்.

**நாம் இனிமேல் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து நான் தமிழ் மக்கள் பேரவையில் கடந்த ஒக்டோபர் மாதம் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட 10 அம்சங்களை மீண்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.**

1. கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள், முன் கோபதாபங்கள், குரோதங்கள், விரோதங்கள் எல்லாவற்றையும் களைந்துவிட்டு தமிழ் தேசிய கோட்பாடுகளுக்கு அமைவாக இணைந்த வடக்கு கிழக்கில் பகிரப்பட்ட இறையாண்மை அடிப்படையில் சமஷ்டி தீர்வு ஒன்றை காணும் அரசியல் பயணத்தில் அகத்திலும் புலத்திலும் உள்ள அனைவரையும் அரவணைத்து செயற்பட வேண்டும்.

2. இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை அக்கறையுடனும் இதய சுத்தியுடனும் பரிசீலிக்கும் எந்த அரசுடனும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு தீர்வை அடையப் பாடுபடுதல் வேண்டும்.

3. அரசாங்கத்துடன் தடைப்பட்டுப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டு உள்நாட்டிலும் சர்வதேச சமுகத்தின் ஊடாகவும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

4. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு குறுக்கு வழிகளை கையாளாமல் போர் குற்ற விசாரணைகள் மூலம் உண்மைகளை எமது சிங்களச் சகோதரர்களுக்கு தெரியப்படுத்தி பரஸ்பர அவநம்பிக்கைகள் மற்றும் அச்சங்களை நீக்கி நிலையான சமாதானம் ஏற்பட சகல வழிகளிலும் பாடுபடவேண்டும். இதற்காக சிங்கள புத்திஜீவிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சமூக மற்றும் மதத் தலைவர்களுடனும் மற்றும் ஊடகங்களுடனும் நெருக்கமாக செயற்பட வேண்டும்.

5. நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டின் மூலம் தனிப்பட்ட கட்சி நலன்களை புறம் தள்ளி மூலோபாய திட்டமிடலுடனான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

6. அரசியலையும் அபிவிருத்தியையும் சம அளவில் சமாந்திரமாக கொண்டு செல்லும் நிறுவன மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

7. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள்சம்பந்தமாக புலம்பெயர் மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உலக நாடுகளின் உதவியுடன் சுயசார்பு பொருளாதார நடவடிக்கைகளை ஏற்படுத்தி மீண்டும் அவர்களுக்கு வளமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்தும் பொருத்தமான பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

8. அரசியல் கைதிகள், காணாமல் போனவர்கள் மற்றும் மக்களின் காணிவிடுவிப்பு போன்றவற்றுக்கு சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் உதவிகளுடனும் அரசாங்கத்துடனான



தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமும் தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

9. இறுதி யுத்தத்தில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்று வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வலுப்படுத்த மேலும் ஆய்வுகளை செய்தும் தரவுகளைத் திரட்டியும் சர்வதேச ரீதியாக அதனை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்.

10. உலகம் முழுவதிலும் வாழ்கின்ற தமிழ் மக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி எமக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பலமான ஒரு ஆதரவு சக்தியை உருவாக்குதல் வேண்டும். எமது இனத்தின் இருப்பை உறுதிசெய்யும் எமது நியாயமான இந்த சுய பாதுகாப்பு போராட்டத்துக்கு புலம்பெயர் தமிழ் மக்கள் மட்டுமன்றி, முக்கியமாக மலையக தமிழ் மக்கள் மற்றும் தமிழ் நாட்டில் வாழுகின்ற கோடிக்கணக்கான எமது தொப்புள் கொடி உறவுகளும், மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா மற்றும் மொரீசியஸ் மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்கின்ற தமிழ்மக்களும், மேலை நாடுகளில் வாழும் எம் மக்களும் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

2ஆம் பக்க தொடர்ச்சி

## கைதுசெய்யப்பட்ட 500 போராளிகளுக்கும்

தற்போது உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்ற பதிலை முன்னாள் ஆட்சியாளர்களும் சரி இந்நாள் ஆட்சியாளர்களும் சரி உரிய பதிலை வழங்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் நீர்த்துப்போக செய்வதற்கு அரசாங்கம், ஐ.நா மட்டுமல்லாது தமிழ் மக்களின் வாக்குகளை பெற்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய காரணகர்த்தாக்களாகவுள்ளனர். அத்தோடு ஜெனீவா மனித உரிமை பேரவையில் மூன்றுதடவை காலநீடிப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கத்தின் நான்கு வரவுசெலவுத்திட்டத்திற்கு ஆதரிக்கவும் ஐம்பத்து இரண்டு நாள் அரசியல் குழப்பத்திற்கு ஆதரவு வழங்கி அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துக்கொண்டு இருக்கின்றனர். இவர்கள் அரசாங்கத்திற்கு நிபந்தனை அற்ற ஆதரவு வழங்கி இவர்களது போராட்டத்தை நீர்த்துபோகச்செய்துள்ளனர்.

அரசாங்கத்தின் கொடூர தன்மையின் முக்கிய விடயமாக போராளிகளோடு கைதுசெய்யப்பட்ட 27 குழந்தைகளின் நிலை என்ன? அவர்களுக்கு என்ன நடந்தது என அரசு கூறமறுப்பது ஏன்? என்ற கேள்வியையும் அவர் முன்வைத்தார்.

## வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அழிக்கப்பட்டது புலிகளாலா? பாராளுமன்றத்தில் சம்பந்தன் சொன்னது இதுதான்

"புலிகளாலும் இராணுவத்தினராலும் அழிக்கப்பட்ட வடமாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு நீங்கள் ஐந்து பில்லியன் தந்துள்ளீர்கள். இது போதாது. எமக்கு இன்னும் 24 பில்லியன் தேவை. அதில் 70 வீதத்தையாவது தரவேண்டும்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.



வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு முன்னதாக வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே, "புலிகளாலும் இராணுவத்தினராலும் அழிக்கப்பட்ட..." என்ற சொற்களை சம்பந்தன் பயன்படுத்தினார். அதன்போது, பின்னுக்கு திரும்பிப் பார்த்து, "நேற்றைய தினம் சுமந்திரனும் இது குறித்து பேசியிருந்தார்" என சம்பந்தன் குறிப்பிட்டபோது, சுமந்திரன் ஆசனத்தில் இருக்கவில்லை. பாராளுமன்றத்தில் பட்ஜெட் மீதான விவாதத்தில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து உரையாற்றிய சம்பந்தன், இறுதியில் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான ஒதுக்கீடு போதாது என்பதை அவர்கள் குறிப்பிட்ட போதிலும், அதனை ஒரு நிபந்தனையாக முன்வைத்து அரசுடன் பேரம் பேசுவதற்கும் அவர்கள் முன்வரவில்லை. காணாமல்போனவர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்திருக்கலாம் என்ற போதிலும், கம்பரெலிய என்ற கிராம அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவருடைய வாய்களையும் அரசாங்கம் மூடிவிட்டதாக தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஐ.நா மன்றம் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கியதால் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம்

## காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் முல்லைத்தீவு இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஷ்வரி

இன்று வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி முல்லைத்தீவு நகரலிருந்து வட்டுவாகல் பாலம் வரை மாபெரும் கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதுகுறித்து வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் முல்லைத்தீவு இணைப்பாளர் செல்வேஸ்வரி அவர்கள் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்.

**வட்டுவாகல் பாலம் வரை முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தின் முக்கிய கோரிக்கை என்ன?**

இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர் பல்வேறு இடங்களில் வைத்து எமது உறவினர்களை கையளித்தாலும் இந்த வட்டுவாகல் பாலத்தில்தான் எங்கள் உறவுகளை அதிகளவில் கையளித்துள்ளோம். சர்வதேச போர் விதிமுறைகளிலும் சர்வதேச சமூகத்திலும் முழு நம்பிக்கை வைத்தே இலங்கை அரசிடம் எமது உறவுகளை கையளித்தோம். இந்த சின்னஞ்சிறிய தீவில் கையிலே கொடுத்தவர்கள் எங்கே என்று பதில் தெரியாத அரசிற்கு ஐ.நா. மன்றம் கால அவகாசம் வழங்கியமை தவறு என்பதை கண்டித்தே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த பாலத்தடியில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.



இலங்கை அரசியலில் அதிகார நெருக்கடி ஏற்பட்டபோது கூட்டமைப்பினர் கொழும்பிலுள்ள இராசதந்திரிகளை அழைத்து பேச்சு வார்த்தை நடத்திய போது.

எங்களின் நீதிகோரிய போராட்டம் நிக்காது என்பதையும் இதைத்தான் நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளபோகின்றோம் என்பதை இலங்கை அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துரைப்பதற்காகவே இன்று இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

ஐ.நா.மன்றமானது இலங்கைக்கு மீண்டும் 02 வருட கால அவகாசம் கொடுத்துள்ளது இதுதொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகளின் மனநிலை எவ்வாறு உள்ளது?

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை இழந்துவாடும் உறவுகளாகிய நாங்கள் எமது உறவுகளைத் மீட்பதற்காக தொடர் போராட்டத்தினை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். கடந்த 2 வருடங்களை கடந்து வெயிலையும் மழையையும் பாராமல் வீதியில் இறங்கி போராடிய எங்களின் கோரிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் செவிசாய்க்காமல் இலங்கை அரசிற்கு கால அவகாசம் வழங்கியதால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் ஏமாற்றமடைந்துள்ளோம்.

**இலங்கைக்கு மீண்டும் 02 வருட கால அவகாசம் வழங்கப்பட்டமை சரியென தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கூறியுள்ளது இது தொடர்பில் தங்களின் கருத்து?**

ஐ.நா மன்றம் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கியதால் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம். ஐ.நாவில் கால அவகாசம் வழங்கியமை சரி என்று வாதிடுபவர்களின் உறவினர்கள் யாரும் காணாமல் ஆக்கப்படவில்லைத்தானே தமிழ் தேசிய கூட்டமைப்பை பொறுத்தமட்டில் இலங்கையில் தற்போது ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் இந்த அரசை உருவாக்கியவர்கள் அவர்கள் அரசிற்கு எதிராக செயற்படுவார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள்த்தனம்

அண்மையில் இலங்கை அரசியலில் மிகப்பெரும் நெருக்கடி ஏற்பட்டபோது கூட்டமைப்பினர் கொழும்பிலுள்ள இராசதந்திரிகளை அழைத்து மிகப்பெரும் சந்திப்பை ஏற்பாடு செய்தார்கள்.இதே போல காணாமல் ஆக்கப்பட்டோரின் உரிமைக்காக இவ்வாறான ஒரு சந்திப்பை ஏன் இவர்கள் இதுவரை வெளிப்படையாக ஏற்பாடு செய்யவில்லை எமது பிரச்சனைக்காக பாராளுமன்றத்தில் உள்ளிருந்து ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை ஏன் இதுவரை இவர்கள் முன்னெடுக்கவில்லை. தமது நலன்சார்ந்து அரசியலுக்கு முன் எமது ஏக்கங்களும் கண்ணீரும் யாருக்கும் தெரிவதில்லை

**சிறீலங்கா அரசு காணாமல் ஆக்கப்டோர் பிரச்சனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 6000 ரூபாவை இழப்பீடாக வழங்குவதற்கு வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளது. இது தொடர்பில் தங்கள் அமைப்பின் நிலைப்பாடு?**



அரசு இந்த முடிவை அறிவித்த உடனேயே நாங்கள் ஊடகங்கள் ஊடாக எமது நிலைப்பாட்டை அறிவித்தோம். எமது போராட்டத்தின் நோக்கம் இழப்பீடுக்கானது அல்ல. எமது உறவுகள் எங்கே என்பதற்கானது என்பதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஆறாயிரம் ரூபா எங்களுக்கு தேவையில்லை. எங்களுக்கான இழப்பீடு அது இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அரசு பதிலை கூறிவிட்டு அதன் பின்னர் இழப்பீடுகளை பற்றி சிந்திக்கட்டும்.

**கேள்வி.புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சொந்தங்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை மீட்பதற்காக பல்வேறு நெருக்கடிகள் கஷ்டங்களுக்கு மத்தியில் நாங்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம் என்பதை நீங்கள் அனைவரும் உணர்வீர்கள். நீங்கள் வாழும் நாடுகளில் எமக்கு ஆதரவான தொடர் போராட்டங்களை முன்னெடுத்து எமது கோரிக்கைகளுக்கு வலு சேர்க்க வேண்டும் என்பதை உங்களிடம் வேண்டி நிற்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் எமக்கு கிடைக்க வேண்டும். வேறு எந்த கோரிக்கையும் இல்லை. நிவாரணத்தினை கேட்டோ அல்லது வேறு ஏதாவது கோரிக்கைக்காவோ நாங்கள் போராடவில்லை. கையளித்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள், வெள்ளைவானில் கடத்தியுள்ளார்கள், வேறுபல வழிகளிலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் , கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் எங்கள் உறவுகளை கையளித்துள்ளோம் அந்த உறவுகள் கிடைப்பதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து குரல் கொடுங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

# சிறிலங்கா குறித்த தீர்மானத்துக்கு மேலும் 16 நாடுகள் இணை அனுசரணை

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 40 ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட சிறிலங்கா தொடர்பான, தீர்மானத்துக்கு மேலும் பல நாடுகள் இணை அனுசரணை வழங்கி கையெழுத்திட்டுள்ளன.

சிறிலங்காவில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பிலான தீர்மானம் கடந்த மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி கையெழுத்திடுவதற்கான கடைசி நாள் கடந்த வெள்ளிக்கிழமையாகும். இந்தக் கால அவகாசத்துக்குள், மேலும் 16 நாடுகள் இணை அனுசரணை வழங்கி கையெழுத்திட்டுள்ளதாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது. கோஸ்டாரிக்கா, சைப்ரஸ், எஸ்தோனியா, பிரான்ஸ், இஸ்ரேல், லத்வியா, லிச்ரென்ஸ்ரெய்ன், லித்வேனியா, மாலைதீவு, போர்துகல், தென்கொரியா, ஸ்லோவேனியா, சுவிட்சர்லாந்து, ஹங்கேரி, ஜப்பான், ஸ்பெய்ன் ஆகிய 16 நாடுகளுமே, இணை அனுசரணை வழங்கி கையெழுத்திட்டுள்ளன.

ஏற்கனவே இந்த தீர்மானத்துக்கு அனுசரணை மற்றும் இணை அனுசரணை வழங்கி, அல்பேனியா, அவுஸ்ரேலியா, ஒஸ்ரியா, பெல்ஜியம், பல்கேரியா, கனடா, குரோசியா, செக்கியா, டென்டார்க், பின்லாந்து, ஜோர்ஜியா, ஜேர்மனி, கிறீஸ், ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லக்ஸம்பேர்க், மால்டா, மொன்ரெனிக்ரோ, நெதர்லாந்து, நியூசிலாந்து, வடக்கு மசிடோனியா, நோர்வே, போலந்து, ருமேனியா, சான் மரினோ, சிறிலங்கா, ஸ்லோவாக்கியா, சுவீடன், பிரித்தானியா ஆகிய 30 நாடுகள் கையெழுத்திட்டிருந்தன.

புதிதாக 16 நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளதை அடுத்து, அனுசரணை மற்றும் இணை அனுசரணை வழங்கியுள்ள நாடுகளின் மொத்த எண்ணிக்கை 46 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

# வட்டுவாகல் - இன அழிப்பின் சாட்சி நிலத்திலிருந்து ஒரு போராட்டம்

தீபச்செல்வன்




வட்டுவாகல், இன அழிப்புப் போரின் சாட்சியான நிலம். வட்டுவாகலை கடக்கும் எந்த ஈழத் தமிழருக்கும் ஒருமுறை நெஞ்சம் துடிக்கும். மாபெரும் இனப்படுகொலையின் சாட்சியாக இருக்கும் அந்த நிலம் இன்று முழுவதுமாய் சிங்கள இராணுவத்திடம் சிக்கியுள்ளது. வட்டுவாகல் பகுதியில் கோத்தபாய என்ற பாரிய கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதனை அண்டி சுமார் 650 ஏக்கர் நிலப் பகுதியை முள்வேலியிட்டு சிங்கள இராணுவம் அபகரித்து வைத்திருக்கிறது. அந்த நிலப் பகுதியை நிரந்தரமாக சிங்களப் படைகள் அபகரிக்க கடுமையாக துடித்து வருகின்ற செயற்பாடு கடந்த பத்தாண்டாய் தொடர்கின்றது. இதன் பின்னால் இருக்கும் மர்மம் தான் என்ன?

சுமார் 500 குடும்பங்களுக்குச் சொந்தமான பகுதி வட்டுவாகல். அதனை அபகரித்து முகாமிட்டுள்ள சிங்களக் கடற்படை அதனை நிரந்தரமாக ஆக்கிரமிப்பதற்காக பலமுறை காணி சுவீகரிப்புக்கு முனைந்தது. ஒவ்வொரு முறையும் முல்லைத்தீவு மாவட்ட அரச செயலகத்தின் காணி திணைக்களத்தால் காணி சுவீகரிப்புக்கு அறிவிக்கும் போதெல்லாம் வட்டுவாகல் மக்கள் அந்த இடத்தில் திரண்டு சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக குரல் கொடுத்து அதனை முறியடிப்பார்கள். துப்பாக்கிகளின்றி, பீரங்கிகளின்றி அந்த இடத்தை விழுங்குவதற்கான போரை செய்கிறது சிங்களப் படைகள்.

சிங்களத்தினால் மாத்திரமல்ல, தமிழ் தலைவர்களினால்கூட நல்லாட்சி என்று சொல்லப்படும் மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் கூட்டாட்சியில்கூட பல தடவைகள் வட்டுவாகலை அபகரிப்பதற்கான காணி சுவீகரிப்பு முயற்சிகள் நடந்து முறியடிக்கப்பட்டுள்ளன. இதே வட்டுவாகலில்தான் இறுதி யுத்தத்தின் முடிவில் அந்த நிலத்தின் சாட்சியுடன், மக்கள் சாட்சிகளுடன் பல போராளிகள் சிங்கள அரசை படைகளிடம் கையளிக்கப்பட்டார்கள். அவ்வாறு கையளிக்கப்பட்டமையை மறைத்து, மாபெரும் அநீதியை ஈழத் தமிழர்களுக்கு இழைத்து வருகின்றது சிங்கள அரசு.

வட்டுவாகல் போராளிகள் கையளிப்பு ஏராளமான சாட்சியங்கள் சிங்கள அரசுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ளன. நீதிமன்றத்திலும், சிங்கள அரசின் ஆணைக் குழு முன்பாகவும் இவை எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் கடற் புலிகளின் நிதிப் பிரிவில் பொறுப்பாளராக இருந்த வைரமுத்து ரதீஸ்வரன் எனப்படும் சுமன் என்பவரின் மனைவி சபிதா, சிங்கள அரசின் காணாமற் போனோரை கண்டுபிடிக்கும் சனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் அளித்த சாட்சியம் முக்கியத்துவமானது. அதில், விடுதலைப் புலிகளின் தளபதிகளான எழிலன், விமல் மாஸ்ரர், நரேன், மேனன், ஆகியோரை இராணுவத்தினர் வட்டுவாகலில் இருந்து பேருந்தில் கொண்டு செல்வதை தாம் நேரில் கண்டதாக கூறினார்.

வட்டுவாகலில் 3 பஸ்கள் தரித்து நின்றன. அந்த பஸ்களில் பாதிரியார் பிரான்சிஸ் தலைமையில் சரணடைந்த சுமார் 40 விடுதலைப் புலிகளின் தளபதிகள் ஏற்றப்பட்டதாகவும் தன்னை ஓமந்தைக்குச் செல்லுமாறு கூறிய கணவர், தங்களையும் அங்குதான் கொண்டு வருவார்கள் என்றும் தன்னிடம் தெரிவித்ததாகவும் இதன்போது, முக்கிய தளபதிகள் பலரையும் அங்குதாம் கண்டிருந்ததாகவும் அவர்கள் எங்கு கொண்டுசெல்லப்பட்டனரென தெரியவில்லை எனவும் அவர் தனது சாட்சியத்தை பதிவு செய்துள்ளார்.

அத்துடன் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான திருஞானசுந்தரம் ஜனார்த்தனன் என அழைக்கப்படும் நரேன் என்பவரும் அவரது மனைவியும் வட்டுவாகல் கையளிப்பு தொடர்பில் சாட்சியம் அளித்துள்ளார். 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி பாதிரியார் பிரான்ஸிஸ் தலைமையில் சரணடைந்தமை பற்றி தளபதி நரேனின் பெற்றோரும் சாட்சியம் அளித்துள்ளனர். அவர்களை அனைவரையும் இராணுவத்தினர் பஸ்ஸில் ஏற்றியதுடன், மனைவிக்கு பஸ்ஸில் இடமில்லையெனக் கூறப்பட்டு, அவர் ஓமந்தையில் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று வெளியில் வந்துள்ளார். ஆனால், நரேன் இன்னமும் விடுவிக்கப்படவில்லை அவரது தாயார் சாட்சியமளித்துள்ளார்.

இதேவேளை மாதவன் மாஸ்டர் எனப்படும் விடுதலைப் புலிகளின் தளபதியும் பிரான்சிஸ் தலைமையில் சரணடைந்ததாகவும் அவரது மனைவி சாட்சியமளித்திருந்தார். 'கதிர்காமத்தம்பி தர்மலிங்கம்' எனப்படும் விடுதலைப் புலிகளின் தளபதியொருவரும் இவ்வாறு சரணடைந்ததாக அவரது தாயார் கூறியமை மற்றுமொரு ஆதாரமாகும்.

நடேசன், புலித்தேவன், இரமேஷ் மற்றும் சுமார் 300 போராளிகள் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த அதே நேரத்தில் (மே 18, 2009) விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் பலர் வட்டுவாகலில் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இதில் சிலர் தங்களது குடும்பத்தோடு சரணடைந்தார்கள். வட்டுவாகல் பாலத்தினை மக்கள் கடந்து சென்ற போது இராணுவத்தினர் மக்களிலிருந்து போராளிகளைப் பிரித்தெடுத்தனர். மே 18 ஆம் நாள் காலையில் சரணடைந்த புலிகளின் தலைவர்களான யோகி, புதுவை இரத்தினதுரை, பாலகுமாரன், லோறன்ஸ் திலகர், குட்டி, எழிலன், கரிகாலன் போன்ற சுமார் 50 பேரை வட்டுவாகலில் வைத்துப் பேருந்து ஒன்றில் படையினர் ஏற்றிச் சென்றதாக லங்கா வெப் நியூஸ் தகவல்களை வெளியிட்டிருந்தது.

அத்துடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளின் விபரங்களும் வெளியாகியிருந்தது. குறிப்பாக சரணடைந்தவர்கள் பொதுமக்கள் மற்றும் போராளிகள் முன் நிலையிலேயே சரணடைந்துள்ளார்கள். இதனால் பல சரணடைவுகளை நேரில் பார்த்த சாட்சிகள் உள்ளனர். இலங்கை இராணுவத்தின் தடுப்பு முகாம்களுக்குச் சென்ற இச்சாட்சிகள், பின்னர் விடுதலையாகி வெளியே வந்து தாம் நேரில் கண்டதை கூறியுள்ளார்கள். இத்தனை நேரடிச் சாட்சியங்களுக்கு அமைய சிறப்புத்தளபதி வேலன், புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் உள்ளிட்ட சுமார் 41 முக்கிய நபர்கள் சரணடைந்திருப்பதாகவும் லங்கா வெப் நியூஸ் ஊடகமும் தனது செய்தியில் ஆதாரபூர்வமாக வெளியிட்டிருந்தது.

சிங்கள அரசினால் நடாத்தப்படும் எந்தவொரு விசாரணையும் நீதியை பெற்றுத்தராது என்பதற்கும் அது சிங்களப் பேரினவாத இன அழிப்பை மறைத்து வெள்ளையடிக்கும் என்பதற்கும் வட்டுவாகல் சரணடைவு தொடர்பான வழக்குகள் தக்க எடுத்துக்காட்டுக்கள் ஆகும். முல்லைத்தீவு நீதிமன்றத்திலும், வவுனியா நீதிமன்றத்திலும் பல ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 58ஆவது கட்டளைப் பிரவுக்கு பொறுப்பு வகித்த சவேந்திர சில்வா வட்டுவாகலில் போராளிகளை தனது கைகளில் பெற்றுக் கொண்டமையை ஆதாரமாக காட்டி வழக்குகள் தொடரப்பப்பட்டன. அவை யாவும் நீதியின்றி தூக்கி வீசப்பட்டன. சிங்கள அரசு சொல்லும் பதில்கள்தான் நீதிமன்றத்தின் தீர்ப்பாகின.



சரணடைந்தவர்கள் எவரும் இல்லை என்று சொல்லும் சிங்கள அரசிடம் அவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை நீதிமன்றங்களும் கேட்பதில்லை. எனவே சர்வதேச விசாரணையே எமக்கு நீதியைப் பெற்றுத் தரும். அதற்கு போராளிகள் கையளிக்கப்பட்ட வட்டுவாகல் மண்ணில் நின்று குரல் எழுப்பும் போராட்டம் மிகவும் முக்கியமானதொரு குறியீடாக அமையும். முள்ளிவாய்க்காலும் நந்திக்கடலும் இனப்படுகொலையின் சாட்சி நிலங்கள். அதைப்போலவே எமது போராளிகள் சிங்கள இன வெறிப் படைகளிடம் கையளிக்கப்பட்ட வட்டுவாகல் மற்றொரு சாட்சி. எமது போராளிகளின் விடுதலையை அதற்கான நீதியை சிங்கள அரசின் இன அழிப்பு முகத்தை உலகிற்கு எடுத்துரைக்கும் இப் போராட்டத்தை உலகறியச் செய்ய வேண்டும். மக்களுடன் இணைந்து போராட வேண்டும்.

# மருத்துவர்கள் மனோஜ் தம்பதியினர் சொல்லும் செய்தி என்ன?

பெரும்பாலான தமிழ் மருத்துவர்கள் தங்களது கல்வியை முடித்துவிட்டு தங்களுடைய சொந்த பிரதேசங்களில் பணியாற்ற வருவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக தமிழ் மக்களிடம் இருந்து வருகிறது. அந்தந்த மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி, மக்களின் வரிப்பணம் என்பவற்றில் கல்வி கற்றுவிட்டு எங்கோ பறந்து விடுகின்றனர். இந்த நிலையில்தான் மருத்துவர் மனோஜ் சோமரத்தன கவனம் பெறுகின்றார்.

இலங்கை சுகாதாரத்துறையின் முக்கியபொறுப்பில் உள்ள தமிழ்பேசும் உயர் அலுவலர் ஒருவரால் 'வில்லங்கமான'ஒரு அறிவுரை மருத்துவர் மனோஜ் சோமரத்தனவுக்கு வழங்கப்பட்டது.

அதாவது

"Dr.மனோச் நீங்கள் பிரமந்தனாறு வைத்தியசாலையில் கடமைக்குச் செல்வதிலிருந்து விலக விரும்பினால் அதனை எழுத்து மூலம் தாருங்கள். அவ் வைத்தியசாலையை மூடுவது குறித்து நான் கவனத்தில் எடுக்கிறேன். அவ் வைத்தியசாலை மூடப்பட்டால் அதற்கு நீங்கள் பொறுப்புக் கூறவேண்டியதில்லை. ஏனெனில் நீங்கள் அங்கு தொண்டு அடிப்படையில்த்தான் கடமைக்குச் செல்கிறீர்கள். அதேவேளை அவ்வாறு வைத்தியசாலை மூடப்படும் போது பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அப்போது நாங்கள் எமக்குப் அந்த வைத்தியசாலைக்கு வைத்தியர் அவசியம் என்ற விடயத்தை உயர் மட்டத்தினருக்கு இலகுவாக எடுத்துச் சொல்லலாம்". என்பதே அந்த ஆலோசனை.

ஆனால் மருத்துவர் மனோஜ் அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை, பொது மக்களின் நலன்களில் கவனம் செலுத்திய அவர் தனக்கான பதிலீட்டு வைத்தியர் நியமிக்கப்படும் வரை பிரமந்தானாறு வைத்தியசாலையினையும் பொறுப்பேற்று அதனோடு தான் கடமையாற்றிய கண்டாவளை, தர்மபுரம் வைத்தியசாலைகளையும் கவனித்து வந்தார். அத்தோடு தனது மனைவியான மருத்துவர் கிரிசாந்தி பிரியதர்சினி பணியாற்றிய உருத்திரபுரம் வைத்தியசாலையினையும் கவனித்து வந்தார்.

கண்டியிலிருந்து வந்து கிளிநொச்சியில் இவ்வாறு பணியாற்றிய ஒரு மருத்துவர் தற்போது இடமாற்றம் பெற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு செல்கின்றார். எனவே அவரின் சேவையை மதிப்பளித்து இலக்கு மின்னிதழ் நேர்காணல் மேற்கொண்டது.

**உங்களைப் பற்றிய சிறு அறிமுகம் செய்யமுடியுமா?**

கண்டி வெலிகல்லவில் 1986 இல் பிறந்து, கிங்ஸ்வூட் கல்லூரியில் பாடசாலைக் கல்வியை முடித்து ரஸ்சியாவில் மருத்துக் கல்வியை நிறைவு செய்து பின்னர் யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையில் உள்ளக பயிற்சியை நிறைவு செய்து 2016 ஒக்ஸ்ட் கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம் மற்றும் கண்டாவளை வைத்தியசாலைகளில் கடமைகளை பொறுப்பேற்றேன்.

பின்னர் எனது மனைவிக்கு முதல் நியமனமாக கிளிநொச்சி உருத்திரபுரம் வைத்தியசாலை கிடைக்கப்பெற்றது. எனவே அவரும் இங்கு வந்தவுடன் நான் மனைவி குழந்தை என குடும்பமாக உருத்திரபுரம் வைத்தியசாலையின் மருத்துவர் விடுத்தியில் தங்கிநின்று பணிகளை ஆரம்பித்தோம்.

**கிளிநொச்சிக்கு வரும்போது எவ்வாறான உணர்வு உங்களுக்கு இருந்தது?**

ஆரம்பத்தில் பயமாக இருந்தது அதுவும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொலைவில் உள்ள ஒரு வைத்தியசாலைக்கு நியமனம் கிடைத்த போதும் பாதுகாப்பு விடயத்தில் அச்சம் இருந்தது. எனக்கு மட்டுமல்ல எனது குடும்பத்தினர் உறவினர்கள் என பலருக்கும் இந்த உணர்வு காணப்பட்டது. ஆனால் இங்கு வந்து சில மாதங்களில் எமது எண்ணம் முற்றுமுழுதாக நீங்கியது. எமது பெற்றோர்கள் உறவினர்களுக்கும் கூட எமது விடயத்தில் திருப்தி அடைந்தனர். பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது.

இங்கு மக்கள் எங்களுடன் பழகும் போது மொழி மாத்திரமே ஒரு தடையாக இருந்தது. மற்றும்படி எந்தப் பிரச்சினைகளும் ஏற்படவில்லை. எங்களுக்கு இந்தப் பிரதேச மக்கள் பெரும் உதவியாக இருந்தார்கள். அடிக்கடி எங்களிடம் வந்து டொக்ரர் என்ன செய்யவேண்டும்? என்ன உதவி தேவை என்று கேட்பார்கள். சந்தைக்கு சென்றால் அங்கு ஏனையவர்களுக்கு வழங்கும் விலையைவிட குறைவான விலையில் எங்களுக்கு பொருட்களை தருவார்கள்.



நான் தர்மபுரம், கண்டாவளை, பிரமந்தனாறு வைத்தியசாலைகளுக்கு செல்கின்ற போது மனைவி உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும். இச் சந்தர்ப்பங்களில் குழந்தையை வைத்தியசாலை பெண் பணியாளர்கள் கவனிப்பதில் உதவி செய்வார்கள். எங்களை இங்கு நடைபெறுகின்ற நிகழ்வுகளுக்கு அழைப்பார்கள். எனவே இவையெல்லாம் மனதை தொட்ட விடயங்கள்

**கிளிநொச்சியைவிட்டுச் செல்லும் போது இன்று எவ்வாறு உணருகிறீர்கள்?**

ஒருபுறம் சின்ன கவலை. மறுபுறம் பிள்ளையின் எதிர்காலம். மகன் அடுத்த வருடம் முதல் பாடசாலைக்கு செல்ல வேண்டும். எனவே இங்கிருந்தால் மகனின் கல்வியை தொடர முடியாது. அத்தோடு கிளிநொச்சியே எனக்கு தமிழை கற்றுத்தந்தது. ஓரளவுக்கு தமிழ் பேசுவதற்கு கிளிநொச்சியும், இங்குள்ள மக்களுமே காரணம். அதற்காக நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். கிளிநொச்சியிலிருந்து எடுத்துச்செல்வது இந்த மக்களுடைய அன்பையும் மொழியையும்தான்.

கிளிநொச்சி என் வாழ்நாளில் என்றைக்கும் மறக்க முடியாத பிரதேசம். ஒன்று முதல் நியமனம், இரண்டாவது ஒரு மொழியை கற்றுக்கொண்டது.

**கிளிநொச்சியில் நீங்கள் செலவிட்டகாலம் குறித்து உங்களது மனப்பதிவுகள் என்ன?**

யுத்த காலத்தில் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் பரஸ்பரம் இருந்த மனப் பதிவுகள் இங்கு நான் செலவிட்ட காலத்தில் எனக்கு இல்லாது போனது. அன்பான மக்கள் எங்களை வரவேற்று உதவிய உள்ளங்கள், எங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வுகள். பணியாற்றிய காலத்தில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய பணியாளர்கள், திணைக்கள அதிகாரிகள் என அனைவரும் எமது மனப்பதிவுகளில் நீங்காத இடம்பிடித்தவர்கள்.

**மூன்று சுற்றயல் வைத்தியசாலைகளைப் பொறுப்பெடுக்கும் எண்ணம் ஏன் உங்களுக்கு வந்தது?**

தர்மபுரம். பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றிய போது அங்கு பிரமந்தனாறு மற்றும் கண்டாவளை பிரதேசங்களிலிருந்து அதிக பொது மக்கள் நீண்ட தூரம் பயணம் செய்து சிகிசைக்காக வருவார்கள். இந்தப் பிரதேசங்களில் போக்குவரத்தும் சீராக இருப்பதில்லை. இந்த நிலையில் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு தர்மபுரம் வைத்தியசாலைக்கு வருவதனை அவதானித்திருக்கிறேன். பலரிடம் பஸ் காசு மட்டுமே காணப்படும். எனவேதான் அந்தந்த பிரதேச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவை இயங்கச் செய்தால் இங்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவதோடு பொது மக்களுக்கும் இலகுவாக இருக்கும் என நினைத்தேன். அதற்காகவே பொறுப்பெடுத்து கடமையாற்றினேன். எங்களிடம் போக்குவரத்துக்கு வாகனம் இருக்கிறது. அரசு அதற்காக கொடுப்பனவையும் தருகிறது எனவே எனது பணியை தொடர்ந்தேன்.

**கிளிநொச்சிக்கு நீங்கள் எதையாவது கூற விரும்புகிறீர்களா?**

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது என்பதை அறிய முடிகிறது. நாங்கள் பணியாற்றிய காலத்திலும் கூட பதில் கடமைக்கு ஒருவரை பெற்றுக்கொள்வதிலும் நெருக்கடி இருந்தது. நாம் இடமாற்றம் பெற்று செல்வதற்கு முன் இங்கு ஒரு வைத்தியரை நியமிக்க வேண்டும் அதற்கு ஒருவரை நியமிப்பதில் சிக்கல்கள் காணப்பட்டது. இறுதியாக வரக்காபொல எனும் இடத்தில் இருந்து முஸ்லிம் சகோதரி ஒருவர் வந்திருக்கின்றார்.

எனவே நான் கூற விரும்புவது நான் அறிந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வருடந்தோரும் ஐந்து பேர் பல்கலைகழகத்திற்கு மருத்துவதுறைக்கு செல்கின்றார்கள். அவ்வாறே வருடந்தோறும் ஐந்து பேர் இந்த மாவட்டத்திற்குரியவர்கள் மருத்துவ கற்கை நெறியை முடித்து வெளியேறுகின்றனர். ஆனால் அவர்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரை தவிர வேறு எவரும் சொந்த மாவட்டத்திற்கு வருவதில்லை அது ஏன்? தங்களுடைய முதல் நியமனக் காலத்தையாவது இந்த மாவட்டத்தில் பணியாற்ற வேண்டும் என்று இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் நினைத்தால் இங்கு வைத்தியர்களின் பற்றாக்குறையே ஏற்படாது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு பணியாற்ற கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் முன்வரவேண்டும் என்பதுவே எனது கோரிக்கை என்றார்.

# நான் செல்வநாயகம் பேசுகிறேன்



**கணிதன்**

அன்புத் தம்பிகளே! ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கத் துணிந்த ஜி.ஜி. பொன்னம்பலத்தைவிட்டு விலகி சமஷ்டியை வலியுறுத்தி அந்தக் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்காகவே நான் இலங்கை தமிழரசுக் கட்சியை துவக்கினேன். இன்று எனது பெயரை வைத்துக்கொண்டு நான் உருவாக்கிய கட்சியைப் பயன்படுத்தி, எனது கொள்கையை மீறி ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதுடன், அதன் அரசாங்கத்தை என்ன விலைகொடுத்தும் காக்கத் துணிகிறீர்களே அப்படி நான் உங்களுக்கு என்ன பாவம் செய்தேன்?

எனது நோயின் காரணமாக என்னால் பேச முடியாது என்ற பலவீனத்தைப் பயன்படுத்தி அன்று அமிர்தலிங்கம் நான் சொல்லாததையெல்லாம் சொன்னதாகச் சொல்லி என்னை அன்புடன் தந்தை செல்வா என்று வாஞ்சையுடன் அழைத்த எனது மக்களைத் தவறாக வழிநடத்தினார். அதன் தொடர்ச்சியே வட்டுக்கோட்டை தீர்மானமும் பின்னர் இன்றுவரை நீண்டு செல்லும் அவலங்களும்.

இவர்கள் தமது அதிகாரப்பசிக்காகத் தமிழ் மக்களை நடுத்தெருவில் விடப்போகிறார்கள் என்று 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றிய உடனேயே எனக்குத் தெரிந்துவிட்டது. அன்று கட்சிக்குள்ளேயே தமிழீழத்திற்கான எல்லைகளை எப்படி நிர்ணயம் செய்வது? வேலியா போடமுடியும் அல்லது சுவரெழுப்புவதா என்றெல்லாம் கேள்விகள் எழும்பியிருந்தன. இத்தனையையும் கண்ணுற்றபின்னும் நான் உயிருடன் இருக்க வேண்டுமா என்று கடவுளை வேண்டியபடியே இருந்தேன். ஒருவழியாக 1977ஆம் ஆண்டு எனது பிரார்த்தனை பலித்துவிட்டது. நான் உங்களின் அரக்கப்பிடியிலிருந்து விடுபட்டுவிட்டேன். எனக்கு கிடைத்த விடுதலையினால்தான் இனி தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினேன்.

ஆனாலும் என்னால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து சாத்வீக முயற்சிகளும் சிங்கள பௌத்த மேலாதிக்க தீவிரவாத ஆளும் சக்திகளினால் ஆயுதமுனையில் அடக்கப்பட்டதன் விளைவாக எப்படியாவது ஈழத்தை அடைந்துவிட வேண்டும் என்னும் எண்ணம் எமது இளம்பிள்ளைகளிடம் கருக்கொண்டது. சரி பிழைக்கு அப்பால் ஆயுதப் போராட்டத்தின் மூலமாகவே தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையை வென்றெடுக்க முடியும் என்ற முடிவிற்கு இளைஞர்கள் வருவதற்கு எம்மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட தாக்குதல்களே காரணம் என்பதை இன்று ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் அறிவிலிகளே அறிவீர்களா?

தங்கள் கண்முன்னே தமது தலைவர்கள் தாக்கப்படுவதை சகிக்க முடியாமலும் சாத்வீகப் போராட்டங்கள்கூட மூர்க்கமான ஆயுதப்படைகளினால் அடக்கப்பட்டதன் விளைவாக இனி சிங்கள ஆட்சியாளர்களின் கீழ் இருக்க முடியாது என்ற கள யதார்த்தமுமே ஆயுதப் போராட்டத்தின் மூலம் இறைமையுள்ள தனி அரசை ஸ்தாபிப்பதற்கான முயற்சி என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

பண்டாரநாயக்காவுடன் நான் செய்துகொண்ட ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட உடனேயே சிங்கள தலைமைகள் எம்மை கறிவேப்பிலையாகப் பயன்படுத்துகின்றனர் என்பதை நான் உணர்ந்திருந்தேனே. நான் மரணிக்கும்வரை என்னுடன் பயணித்த உங்களால் எப்படி இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட முடிகிறது?

தம்பி அமிர்தலிங்கம்கூட மலேசியா சிங்கப்பூர் பிரச்சினையைக் குறிப்பிட்டுக் காட்டி இப்படி ஒரு சில நாடுகள் மட்டுமே இரத்தம் சிந்தாமல் விடுதலை அடைந்துள்ளன. பெரும்பாலான நாடுகள் ஆயுதப் போராட்டத்தின் மூலமே விடுதலை அடைந்துள்ளன என்று கூறியதை மறந்துவிட்டீர்களா?

1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை

1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை ஈழத்திற்கான அரசியலமைப்பை உருவாக்குவதற்கான அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் என்று கூறினீர்களே இது உங்களது அயோக்கியத்தனம் இல்லையா?

தமிழீழத்தைப் பிரகடனம் செய்துவிட்டு பின்னர் மாவட்ட அமைச்சர் பதவிக்கும் மாவட்ட அபிவிருத்தி சபைக்குமான தேர்தல்களில் போட்டியிட்டீர்களே? இதுதான் உங்களது அரசியல் நேர்மையா?

தமிழீழத்திற்கான சர்வசன வாக்கெடுப்பு தவிர்ந்த ஏனைய எந்தத் தேர்தல்களிலும் போட்டியிடக்கூடாது என்று அன்றைய இளைஞர்கள் வற்புறுத்திய நேரத்தில் மேற்குறித்த தேர்தல்கள் ஈழத்திற்கான குட்டிப் பாராளுமன்றத் தேர்தல்கள் என்று மக்களை ஏமாற்றினீர்களே இதுதான் உங்களது விசுவாசமா?

இவ்வளவும் கடந்த பின்னர், நாம் தூண்டிவிட்ட உணர்ச்சிகளால் உந்தப்பட்ட இளைஞர்கள் எமது கோரிக்கையை சிரமேற்கொண்டு தனிநாட்டை அடைவதற்காக நடத்திய ஆயுதப் போராட்டமும் 2009ஆம் ஆண்டு மே மாதத்துடன் மௌனிக்கச் செய்யப்பட்ட நிலையில், எமது உரிமைக்கான கோரிக்கையை இராசதந்திர ரீதியில் முன்னெடுப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருந்ததே. எனது கட்சியின் பெயரையும் கொடியையும் சின்னத்தையும் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தையும் அரசையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதுடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக வாக்களித்துத்தானே அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்டீர்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்கள் ஆகியவற்றில் போட்டியிடும்போதுகூட எமக்கான அபிவிருத்தியை நாமே மேற்கொள்ள இணைந்த வடக்கு-கிழக்கில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்த ஆணை வழங்குங்கள் என்றுதானே வாக்கு கேட்டீர்கள். அபிவிருத்திக்கான நிதியை எமது புலம்பெயர்ந்த உறவுகளிடமிருந்தும், நட்பு நாடுகளிலிருந்தும் பெற்றுத்தருவதாக வாக்குறுதி வழங்கினீர்களே. இவற்றில் எதையாவது நிறைவேற்றினீர்களா?

யுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட அனைத்து வரவு-செலவுத் திட்டங்களிலும் பாதுகாப்புத் தரப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக வரவு-செலவு திட்டத்திற்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வருவது ஏன்? வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான நிதியொதுக்கீடு மிகவும் குறைந்தளவில் இருந்தபோதிலும் அவற்றிற்கான நிதியைப் போராடிப் பெறாதது ஏன்?

இறுதி யுத்தம் என்ற போர்வையில் எம்மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறையினூடாக நீதிவிசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதியையும் நியாயத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கு நீங்கள் எடுத்த முயற்சிகளைப் பட்டியலிட முடியுமா?

இலங்கையை சர்வதேசத்தின் கண்காணிப்பில் வைத்திருக்கிறோம் என்று சொல்லி, 2015ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு இலங்கையையும் இணை அனுசரணை வழங்கவைத்து திட்டமிட்டு காலநீட்டிப்பைப் பெற்றுக்கொடுத்துவிட்டு நாடாளுமன்றத்தில் மிரட்டுவதுபோல் நடிப்பதுதான் நீங்கள் என்மீது வைத்திருக்கும் விசுவாசமா?

மக்களால் நிராகரிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக சட்டமூலத்திற்கு எதிராக காலையில் நாடாளுமன்றத்தில் விவாதித்துவிட்டு மாலையில் அந்த சட்டமூலத்திற்காக வாக்களித்ததன் மர்மத்தை விளக்குவீர்களா?

புதிதாக உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சட்டமூலம் பல குழப்பங்களை ஏற்படுத்தும் என்று தெரிந்தும் அவசர அவசரமாக அந்தச் சட்டத்தை நிறைவேற்றி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தியதன் பின்னணியை விளக்குவீர்களா? தமிழர் தாயகப் பிரதேசங்களில் தென்னிலங்கை சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதுதானே? இன்று மாகாணசபைகளுக்கான தேர்தல்களை இழுத்தடிப்பதற்கும் இந்த சட்டம் தானே உங்களுக்குக் கைகொடுக்கிறது. அதாவது மாகாணசபைத் தேர்தல்களில் 50வீதம் வட்டார அடிப்படையிலும் எஞ்சிய 50வீதம் விகிதாசார அடிப்படையிலும் என்ற குழப்பகரமான சட்டம்தானே இன்று உங்களை தேர்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவசியமில்லாமல் செய்திருக்கிறது. ஆயுதப் போராட்ட அமைப்பினரின் மீது விரல் நீட்டுவதற்கு உங்களுக்கு ஏதாவது அருகதை இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்கள் செய்திருக்கும் செயற்பாடுகள் அவர்கள் ஆயுதப் போராட்டத்தின்போது நடத்திய தவறுகளைவிடவும் பாரதூரமானவை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

உங்களிடம் கொள்கைப் பற்றும் இல்லை. மிதவாத அரசியல் தலைமையிடம் இருக்க வேண்டிய இராசதந்திர அணுகுமுறையும் இல்லை. ஆனால் கதிரைகளை சூடேற்றி உங்களது வருமானங்களைப் பெருக்கிக்கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு என் பெயர்தானா உங்களுக்குக் கிடைத்தது?

பின்னால் வரப்போகிற விடயங்களை அறிந்துதானே இனி நான் உருவாக்கிய தமிழரசுக் கட்சியின் பெயரையோ கொடியையோ இலச்சினையையோ பயன்படுத்தக்கூடாது என்று சொல்லி என்னுடன் கொள்கையளவில் முரண்பட்ட ஜிஜியையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி உங்களிடம் கொடுத்துவிட்டு நான் எனது கண்களை மூடினேன். எனது பூத உடலின்மீது கூட எனது கட்சி கொடி போர்த்தக்கூடாது என்று தெரிவித்திருந்தேனே அப்படி இருந்தும் எனது பெயரையும் எனது கட்சியையும் என்ன அடிப்படையில் நீங்கள் பயன்படுத்துகிறீர்கள்?

# தமிழகத்தில் இதுவரை ரூ.105 கோடி, 803 கிலோ தங்கம் பறிமுதல் தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

தமிழகத்தில் இதுவரை ரூ.105.72 கோடி, 803 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கூறினார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அளித்த பேட்டி வருமாறு:-

ரூ.105 கோடி பறிமுதல். தமிழகத்தில் தேர்தல் தொடர்பாக இதுவரை ரூ.105.72 கோடி கைப்பற்றப்பட்டுள்ளது. ரூ.227.45 கோடி மதிப்புள்ள 803 கிலோ தங்கம், 478 கிலோ வெள்ளி பொருட்கள் கைப்பற்றப்பட்டன. 5ஆம் திகதி மட்டும் கோவையில் 149 கிலோ தங்கம் பிடிபட்டது. தூத்துக்குடியில் ரூ.37 லட்சம், தர்மபுரியில் ரூ.1.5 கோடி பிடிபட்டுள்ளது.

அனுமதி இல்லாமல் சுவர் விளம்பரம் செய்ததாக 3,246 வழக்குகளும், பணம், பரிசு பொருள் வழங்கியதாக 302 வழக்குகளும், தேர்தல் விதிமீறல் குற்றத்துக்காக 291 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் தேர்தல் நடவடிக்கை தொடர்பாக 3,839 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் அளித்துள்ள புகார்களின் அடிப்படையிலும் வழக்குகள் பதிவாகியுள்ளன. 150 கம்பெனி துணை ராணுவம் விரைவில் வர உள்ளது. அவை தமிழகத்தின் 4 மண்டலங்களுக்கு பிரித்து அனுப்பப்படும். அதிகபட்சமாக வேலூருக்கு 10 கம்பெனி துணை ராணுவம் அனுப்பப்படும். விழுப்புரம், மதுரைக்கு தலா 8 கம்பெனி அனுப்பப்படும். இவ்வாறு அவர் கூறினார்.



## சென்னையில் பெட்டியில் வைத்து வெளிநாட்டிற்கு கடத்தயிருந்த 490 நட்சத்திர ஆமைகள் பறிமுதல்



சென்னையில் இருந்து தாய்லாந்திற்கு கடத்த முயன்ற 490 அரிய வகை நட்சத்திர ஆமைகளை பறிமுதல் செய்து, வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

சென்னை விமான நிலையத்திற்கு வந்த பயணிகளிடம் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வந்தனர். இதில் சென்னையைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் வைத்திருந்த உடமைகளை பரிசோதனை செய்ததில் பெட்டியில் அரிய வகை நட்சத்திர ஆமைகள் மறைத்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து பெட்டியில் இருந்த 490 நட்சத்திர ஆமைகளையும் பறிமுதல் சுங்கத்துறை அதிகாரிகள் அந்த நபரிடம். விசாரணையில், அவை தாய்லாந்திற்கு கடத்த முயன்றது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து சுங்கத்துறை அதிகாரிகள், அவரை கைது செய்தனர். இக்கடத்தலில் வேறு யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது என்ற கோணத்தில் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆண்டுக்கு 2 சேலைகள் பெண்களுக்கு வழங்கப்படும். நடிகர் பவன் கல்யாண்



ஆந்திராவில் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆண்டு தோறும் இலவசமாக 2 சேலைகள் சீதனமாக வழங்கப்படும் என நடிகர் பவன் கல்யாண் தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளார். ஆந்திராவின் 175 சட்டசபை தொகுதிகள் மற்றும் 25 மக்களவைத் தொகுதிகளுக்கு வருகிற 11ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. இங்கே தெலுங்கு தேசம் கட்சி - ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. காங்கிரஸ் மற்றும் பாஜக கட்சிகள் தனித் தனியாக வேட்பாளர்களை அறிவித்துள்ளன. ஜன சேனா கட்சித் தலைவரும் நடிகருமான பவன் கல்யாண் சட்டசபை தேர்தலில் விசாகப்பட்டினம் மாவட்டம் காஜீவாக்கா, மேற்கு கோதாவரி மாவட்டம் பீமாவரம் ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிடுகிறார். தேர்தல் அறிக்கை ஜன சேனா, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியன கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கின்றன. பவன் கல்யான் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் கவர்ச்சி அறிவிப்புகள் குவிந்துகிடக்கின்றன. தமிழகத்தில் வழங்கப்படுவது போல் அடுக்கடுக்கான இலவசத் திட்டங்களை பவன் கல்யாண் அறிவித்துள்ளார்.

## 20-ம் தேதிக்குள் மீண்டும் ஒருமுறை தாக்குதல் நடத்த இந்தியா திட்டம் - பாகிஸ்தான் மந்திரி அச்சம்


பாலகோட்டுப் பகுதியில் நடத்தியதுபோல் இன்னொரு சாகசத்தை நடத்த முயற்சிக்கும் இந்திய அரசு 20-ம் திகதிக்குள் மீண்டும் ஒருமுறை தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக பாகிஸ்தான் மந்திரி குறிப்பிட்டுள்ளார். காஷ்மீர் மாநிலத்தில் உள்ள எல்லைப்பகுதியை கடந்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீருக்குட்பட்ட பாலகோட்டுப் பகுதிக்குள் கடந்த 26-2-2019 அன்று ஊடுருவிய இந்திய விமானப்படைகள் அதிரடியாக நடத்திய தாக்குதலில் சுமார் 300 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இதேபோல் இன்னொரு தாக்குதலை நடத்த இந்தியா திட்டமிட்டு வருவதாகவும், எங்களுக்கு கிடைத்துள்ள உளவுத்தகவல்களின்படி வரும் 16 முதல் 20-ம் திகதிக்குள் இந்த தாக்குதல் நடைபெறலாம் என்றும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி ஷா மெஹ்மூத் குரைஷி தெரிவித்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் சொத்து ரூ.4 லட்சம் கோடி கடன் உள்ளது சுயேட்சை வேட்பாளர் தகவல்.

தமிழகத்தில் சட்டப்பேரவை இடைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பெரம்பூரில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் நகைப்புக்காக ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி சொத்து என பொய்க்கணக்கைத் தாக்கல் செய்து வேட்பாளராக நிற்கிறார். தேர்தல் ஆணையத்தின் அலட்சியத்தை விளக்கவே தாம் ஒவ்வொரு முறையும் இப்படி போட்டியிடுவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்திய அளவில் பிரபலமான கட்சி ஜனதா தளம். அதன் தமிழக தலைவராக இருந்தவர் நெல்லை ஜெபமணி. நேர்மையாளர், காந்தியவாதி. அவரது மகன் நெல்லை மோகன்ராஜ். இவர் காவல்துறையில் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

சமீபத்தில் பெரம்பூர் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் மோகன்ராஜ் வேட்புமனு தாக்கல் செய்தார். அதனுடன் இணைக்கப்படும் வேட்பாளர் சொத்து, கடன் குறித்த விவரங்களுக்கான படிவத்தில் தனது சொத்து ரூ. 1 லட்சத்து 76,000 கோடி என்றும், கடன் ரூ. 4 லட்சம் கோடி என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் வேட்பமனு பரிசீலனை முடிந்து சுயேட்சை வேட்பாளராக போட்டியிட அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. அவரது



வேட்பமனுவின் நகல் தற்போது வாட்ஸ் அப், சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதுகுறித்து அவர் தனது முகநூலில் பேசி காணொலி ஒன்றை வெளியிட்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

# ஈரானில் கனமழை - வெள்ளத்தில் சிக்கி 70 பேர் பலி

## 350 க்கு மேற்பட்ட கிராமங்கள் முழுமையாக தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.








ஈரானில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்துள்ளது என மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். ஈரான் நாட்டில் வெப்பமயமாதல். பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தற்போது கனமழை பெய்து வருகிறது. கடந்த மாதம் தொடங்கிய கனமழையால் அங்குள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்து வருகின்றன. அங்குள்ள பல்வேறு மாகாணங்களில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி சாலைகள், பாலங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. அனைத்து ஆறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தகவலறிந்து மீட்புக் குழுவினர் விரைந்து சென்றனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்டு வருகின்றனர். சுமார் 86 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு அரசு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகளில் தேசிய பேரிடர் மேலாண்மை குழுவினரும் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது. மேலும் காயமடைந்த பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என மீட்புக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.



# உலக வங்கிக்கு புதிய தலைவராக டேவிட் மால்பாஸ் தேர்வு



உலக வங்கியின் தலைவராக இருந்த ஜிம் யோங் கிம் பதவி விலகியதையடுத்து, புதிய தலைவராக டேவிட் மால்பாஸ் தேர்வாகி உள்ளார்.

உலக நாடுகளில் வறுமையை குறைக்கவும், பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் செயல்பட்டு வரும் உலக வங்கியில் இந்தியா உள்பட 189 நாடுகள் அங்கத்துவமாக உள்ளன. உலக வங்கியின் தலைமையகம் அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் உள்ளது. இந்த வங்கியின் தலைவராக இருக்கும் ஜிம் யாங் கிம், கடந்த சனவரி மாதம் பதவியில் இருந்து விலகினார்.

இதையடுத்து, உலக வங்கியின் தலைவர் பொறுப்புக்கு முன்னிறுத்தும் நபரை தேர்வு செய்வதற்காக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் நிர்வாகம் தீவிரம் காட்டியது. இந்திய வம்சாவளியை சேர்ந்தவரும் பெப்சி நிறுவனத்தின் முன்னாள் சி.இ.ஓ -வான இந்திராநூயி, இவாங்கா டிரம்ப் ஆகியோர் பெயரும் இந்த பதவிக்கு அமெரிக்கா சார்பில் முன்மொழியப்படலாம் என தகவல் வெளியானது.

இந்த நிலையில், ஜிம் யோங் கிம் கடந்த சனவரி மாதம் பதவி விலகியதையடுத்து, அமெரிக்க கருவூலத்துறை அதிகாரி மல்பாஸ் என்பவரை உலக வங்கியின் தலைவராக நியமிக்க அமெரிக்க அதிபர் டிரம்ப் பரிந்துரை செய்ததையடுத்து புதிய தலைவராக டேவிட் மால்பாஸ் தேர்வாகி உள்ளார். உலக வங்கி தலைவராகும் 73-வது அமெரிக்கர் ஆவார். வரும் 9-ம் தேதியன்று அதிகாரப்பூர்வமாக டேவிட் மால்பாஸ் பதவி ஏற்றுக்கொள்ள உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மாலைத்தீவு தேர்தலில் ஓட்டுப்பதிவு விறுவிறுப்பு - வெற்றி பெறப்போவது யார்?



மாலைத்தீவு நாடாளுமன்ற தேர்தலில் காலை 8 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது முதலே விறுவிறுப்பாக இருந்தது. நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்காளர்கள் தங்கள் சனநாயகக்கடமையை ஆற்றினர்

87 இடங்களைக் கொண்டுள்ள மாலைத்தீவு நாடாளுமன்றத்துக்கு நேற்று தேர்தல் நடந்தது. அங்கு அதிபராக இருந்த அப்துல்லா யாமீன் பதவி பறிப்புக்கு பின்னர் நடந்த தேர்தல் என்பதால் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதேபோன்று மற்றொரு முன்னாள் அதிபரான முகமது நஷீத், தலைமறைவு வாழ்க்கையை முடித்து நாடு திரும்பிய நிலையில் இந்த தேர்தல் நடந்துள்ளது. இந்த தேர்தலில் அவர் முக்கிய வேட்பாளராக உள்ளார். 386 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். காலை 8 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது முதலே விறுவிறுப்பாக இருந்தது. நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்காளர்கள் தங்கள் சனநாயகக்கடமையை ஆற்றினர்.

அதிபர் முகமது சோலி காலை 10.15 மணிக்கு தலைநகர் மாலேயில் உள்ள ஜமாலுதீன் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் ஓட்டுபோட்டார். அதைத்தொடர்ந்து வாக்காளர்கள் திரளாக வந்து வாக்கு அளிக்குமாறு அவர் அழைப்பு விடுத்தார். இந்த தேர்தலில் முன்னாள் அதிபர் முகமது நஷீத் மற்றும் தற்போதைய அதிபர் முகமது சோலி ஆகியோரின் எம்.டி.பி. கட்சி வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த தேர்தல் மாலைத்தீவில் மட்டுமல்லாது அந்த நாட்டினர் வசிக்கிற இந்தியா, இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் நடந்துள்ளது.

# இந்தோனேசியாவில் 6.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

இந்தோனேசியா நாட்டில் இன்று அதிகாலை காலை 6.1 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனாலும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. இந்தோனேசியா நாட்டின் மத்தியில் அமைந்துள்ள நுசா டெங்காரா மாகாணத்தில் இன்று அதிகாலை திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது.

இன்று அதிகாலை 4.54 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு




மையம் தகவல் வெளியிட்டுள்ளது. எனினும் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை

இதனால் மக்கள் பலரும் தங்களது வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்து தெருக்களில் தஞ்சம் புகுந்தனர். நிலநடுக்கம் காரணமாக பொது மக்களுக்கோ அல்லது சொத்துகளுக்கோ எந்தவித சேதமும் ஏற்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

# உலகில் தேர்தல் விதிமுறை குறித்தும் தமிழர்கள் தந்த ஓலை தேர்தல் முறை

பேராசிரியர் சு. ராசவேலு, தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகம்

உலக அளவின் மிகப்பெரிய சனநாயக நாடாக விளங்கும் இந்தியாவில் 17-வது நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. மக்கள் தங்களது சனநாயக கடமையை ஆற்றி உறுப்பினர்களைத் தேர்வு செய்து அனுப்ப தயாராகி வருகின்றனர். தேர்தல் ஆணையம் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் தேர்தல் விதிமுறைகள் பல விதித்தும் தேர்தலை நேர்மையாக நடத்த முயற்சியும் செய்து வருகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழகத்தில் குடஓலை தேர்தல் முறை குறித்தும், தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களின் தகுதிகளையும் தகுதியின்மைகளையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக காஞ்சீபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர் என்னும் ஊரில் கிடைத்த ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட இரண்டு கல்வெட்டுகள் உலகில் தேர்தல் முறை குறித்தும் வேட்பாளர்கள் தகுதிகள் குறித்தும் குறிப்பிடும் முதன்மையான சான்றுகளாகும். இது போன்ற தேர்தல்கள் குடஓலை முறை தேர்தல் குறித்து திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர் கல்வெட்டிலும், காவேரிப்பாக்கம், திருநின்றவூர், பாகூர், திருபுவனை, பழைய சீவரம் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகளிலும் குறிப்புகள் உள்ளன.

உலக அளவில் குடியாட்சித் தத்துவத்தை தந்த பழமையான நாடு தமிழ் நாடு. சோழ மன்னன் முதலாம் பராந்தக சோழன் 919-ம் ஆண்டு உத்திரமேரூரில் தேர்தல் நடத்துகிறார். உத்திரமேரூர் இக்காலத்தில் சொல்லப்படுகிற ஒரு தனித்தொகுதி போன்றது. ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் அதிகமாக வசிக்கும் பகுதியாக இவ்வூர் விளங்கியது. இருப்பினும் பிற வகுப்பினரும் இவ்வூரில் வசித்தனர். கல்வெட்டில் தேர்தல் விதிமுறைகள் பற்றி விரிவாக சொல்லப்பட்டுள்ளன.

குடஓலை என்பது ஒரு பெரிய பானையின் வாயைத் துணியால் கட்டி அதன் நடுவில் பெயர் எழுதப்பட்ட ஓலை நறுக்கு ஒன்றை பானையில் போடும் வகையில் ஓட்டை இட்டு ஒவ்வொரு வீதியாக ஊர் பெரியோர்கள் எடுத்துச் சென்று தகுதி வாய்ந்தவர்களின் பெயர்களை ஓலையில் எழுதச் செய்து அப்பானையில் போடும்படி செய்வர். அவ்வாறு தகுதி வாய்ந்த அவ்வூரைச் சேர்ந்த எவரும் தேர்தலில் நிற்க தங்களது பெயரை தாங்களே எழுதி அக்குடத்தில் இடலாம். அவ்வாறு இடப்பட்ட ஓலை நறுக்கினை மாலையில் அவ்வூரின் நடுவில் உள்ள கோவிலின் மண்டபத்தில் மக்கள் மத்தியில் தேர்தல் அதிகாரி



மற்றும் ஊர் பிரமுகர்கள் முன்னிலையில் ஒன்றும் அறியாத ஒரு சிறுவனை அழைத்து அப்பானையின் உள்ளே கையை விட்டு எடுக்கச் செய்து அப்பெயரை உறுப்பினராக தெரிவு செய்துள்ளதாக அறிவிப்பர். அவ்வாறு அந்த ஓலை நறுக்கை சிறுவனிடமிருந்து வாங்கும் போது அத்தேர்தல் அதிகாரி அங்கு கூடியுள்ள மக்களின் முன் தனது கைகள் இரண்டையும் மேலே தூக்கி அகல விரித்து தம் கையில் எந்த ஓலை நறுக்கும் முன்பே வைத்திருக்கவில்லை எனக்கூறி சிறுவன் கொடுத்த ஓலையில் எழுதப்பட்ட பெயரை ஊர் மக்களின் முன் உரக்கப் படிப்பார். தேர்வு செய்யப்பட்ட ஓலை நறுக்கிலுள்ள பெயரை அங்குள்ள ஊர் பிரமுகர்களும் வாங்கி தேர்தல் அதிகாரி படித்த பெயர் சரிதானா என சோதிப்பர். இவ்வாறு அவ்வூரின் 30 உறுப்பினர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்படுவர்.

உறுப்பினராக தேர்தலில் நிற்க விரும்புவோர் 30 வயதிற்கு மேல் 60 வயதிற்குள் இருக்க வேண்டும். அவ்வாறு நிற்கும் உறுப்பினர்கள் அதே ஊரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அவ்வூரில் கால் வேலி நிலம் உடையவராகவும் தனது சொந்த மனையில் அவ்வூரில் வீடு கட்டி வசிப்பவராகவும் அதற்குரிய சொத்து வரியை தவறாமல் அரசுக்கு செலுத்தியவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் அக்கால முறைப்படி கல்வி கற்றிருக்கவேண்டும். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். ஏற்கனவே மூன்று ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர் அடுத்த தேர்தலில் உடனடியாக நிற்கத் தடை விதிக்கப்பட்டிருந்ததுடன் அவரது உறவினர்கள் நிற்பதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. மூன்று ஆண்டுகள் இடைவெளி விட்டபின்பு தான் அவரோ அவரைச் சார்ந்த உறவினர்களோ மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியும். இத்தேர்தல் விதி முறைகளில் இரண்டு ஆண்டுகள் கழித்து 921 -ம் ஆண்டு, அரசு தேர்தல் விதிகளில் சில திருத்தங்களைச் செய்தது. அதன்படி தேர்தலில் நிற்பவரின் சொத்து கால்வேலி நிலத்திலிருந்து அரைக்கால் வேலி நிலம் உடையராகவும் 35 வயதிலிருந்து 70 வயதிற்குள் உள்ளவர் மட்டுமே தேர்தலில் நிற்கலாம் எனவும் மாற்றப்பட்டது. உறுப்பினர் தன் சொத்துகளை தீய வழிகளில் அல்லாமல் நல்லவழியில் சம்பாதித்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. உறுப்பினராக போட்டியிட விரும்புபவர் நல்ல உடற்தகுதியும், மன நோய் இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டது. முன்பே உறுப்பினராக இருந்திருப்பவர் அவரது சொத்து கணக்கை காட்டி இருத்தல் வேண்டும். ஐந்து பாவங்களில் ஒரு பாவம் (பொய் சொல்லுதல் ஐந்து பாவங்களில் ஒன்று) செய்திருந்தாலும் தனது பணிக்காலத்தில் கையூட்டு (லஞ்சம்) பெற்றவராக இருந்தாலும் தேர்தலில் நிற்க தடை விதிக்கப்பட்டது.

பிறர் சொத்துகளை அபகரித்தவர் பிறர் மனை நோக்கியவர் எவரும் தேர்தலில் நிற்க இயலாது. இத்தவறுகளைச் செய்தவர் தாம் மட்டுமன்றி அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்கள், அவர் பெண் எடுத்த குடும்பம், பெண் கொடுத்த குடும்பம், சகோதரர், சகோதரி, பெரியப்பா, சித்தப்பன், மாமன், மாமன் குடும்பத்தினர், அவர்களுடைய உறவினர் குடும்பத்தினர் எவருமே தேர்தலில் நிற்க தடை விதிக்கப்பட்டது.

இத்தகைய கட்டுப்பாடுகளால் தேர்தலில் நிற்பவரின் தகுதி தீர்மானிக்கப்பட்டது. அதனை தீர்மானிப்பவர்களாக மக்களும், அரசும் இருந்தனர். ஒருவர் தவறு செய்தாலும் அவரைச் சார்ந்த சுற்றத்தார் அனைவருமே தகுதியற்ற வர்களாக கருதப்பட்டனர். எனவே சமூகத்தில் நேர்மையாக இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. குடஓலை முறையில் தாம் உண்மையான உறுப்பினராக இருந்த அவ்வூரைச் சேர்ந்த அனைத்து தகுதிகளும் வாய்ந்த எவரும் வாக்களிக்க வாய்ப்பளிக்கப்பட்டாலும் இறுதி வாக்கு சிறுவன் எடுத்துக் கொடுக்கும் ஓலையின் மூலமாகவே அவர் உறுப்பினர் ஆவதற்கு வழி வகுக்கப்பட்டது. எனவே வாக்களிப்பும் இருந்தது சிறுவன் கையில் எடுக்கப்படும் ஓலை நறுக்கின் மூலம் அதிஷ்டமும் இருந்தது. இது போன்று கடுமையான தேர்தல் விதிமுறைகள் இந்தியாவில் பின்பற்றப்பட்டு தீயவர்கள் தேர்தலில் நிற்பதற்கு தடைவிதிக்கப்பட்டால் நல்லவர்களில் ஒருவரைத் தெரிவு செய்ய முடியும். நிச்சயம் நல்லவர்களின் ஆட்சியில் நாடும் மக்களும் நலம் பெறுவர்.

# உலகம் முழுவதும் 5-ல் ஒருவர் ஆரோக்கியமற்ற உணவுகளால் மரணம் - ஆய்வில் தகவல்

தி லான்ஸெட் ஆன்லைனில் 195 நாடுகளில் நடத்திய ஆய்வு முடிவுகள், வெளியிடப்பட்டு உள்ளது அதில் கூறி இருப்பதாவது:- உணவு தொடர்பான இறப்பு விகிதம் உஸ்பெகிஸ்தானில் மிக அதிகமாக இருந்தது மற்றும் இஸ்ரேலில் மிகக் குறைவாக இருந்தது. இந்த இறப்பு விகிதத்தில் அமெரிக்கா 43வது இடத்திலும் , பிரிட்டன் 23வது இடத்திலும், சீனா 140வது மற்றும் இந்தியா 118 வது இடத்திலும் உள்ளன. கொட்டைகள் மற்றும் விதைகள், பால் மற்றும் முழு தானியங்கள் போன்ற ஆரோக்கியமான உணவுகளின் நுகர்வு சராசரியாக குறைவாக இருந்தது, மேலும் மக்கள் அதிக இனிப்பு பானங்கள் மற்றும் அதிக பதப்படுத்தப்பட்ட இறைச்சி



மற்றும் உப்பு ஆகியவற்றை உட்கொண்டனர்.

ஆய்வில் பரிந்துரைக்கப்பட்ட பருப்பு மற்றும் விதைகள் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் 12 சதவிகிதம் மட்டுமே மக்கள் சாப்பிடுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட 21 கிராமில் சராசரியாக 3 கிராம் தான் ஒரு நாளைக்கு உட்கொள்கின்றனர். பரிந்துரைக்கப்பட்ட அளவை விட இனிப்பு பானங்கள் 10 மடங்கு அதிகமாக குடிக்கிறார்கள். சர்க்கரை, உப்பு மற்றும் கெட்ட கொழுப்புகள் அதிகமான உணவுகள் இதய நோய், பக்கவாதம், நீரிழிவு மற்றும் பல வகையான புற்றுநோய்களுக்கான ஆபத்து காரணிகளாக அமைகின்றன.

உணவு சம்பந்தமான இறப்புக்கள் இந்த ஆய்வில் 2017 ல் 11 மில்லியன் என்று கண்டறியப்பட்டது,, கிட்டத்தட்ட 10 மில்லியன் பேர் இதய நோய்களாலும், புற்றுநோயால் சுமார் 913,000 பேரும், 2 நீரிழிவு நோய்களால் 339,000 பேரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். உணவு தொடர்பான வருடாந்த இறப்பு 1990 ஆம் ஆண்டில் 8 மில்லியனிலிருந்து அதிகரித்து உள்ளது என அதில் கூறப்பட்டு உள்ளது. நோய் ஆய்வுக்கான உலகளாவிய அமைப்பு 1990 ஆம் ஆண்டு முதல் 2017 வரையிலான 15 உணவுப்பொருட்களின் நுகர்வு போக்குகளை கண்காணித்தது. கிறிஸ் முர்ரே, வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனத்தின் இயக்குனர் இந்த ஆய்வை மேற்கொண்டார். அவர் கூறும் போது உலகில் இருக்கும் ஆபத்து காரணிகளை விட அதிகமான இறப்புகளுக்கு சுகாதாரமற்ற உணவே காரணம் என கூறினார்.